**CHARTERED ACCOUNTANCY @ VEAL BUSINESS COLLEGE**
Trincomalee
Contact : 0777 555 738

தை மாதம் 06ம் திகதி


January 26, 2013

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 27 MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்



பெரு மதிப்பிற்குரிய திரு. நா. தம்பிராசா அவர்கள்

### இயற்கை எய்தினார்

# திருமலையின் வரலாற்று நாயகன்

திருகோணமலையின் வரலாறுகள் அடங்கிய கல்வெட்டுக்களை தேடித் தேடிக் கண்டுபிடித்து அவற்றை உரியவர்களைக் கொண்டு வாசித்து வெளியிடச் செய்து திருகோணமலையின் வரலாற்றை உறுதியான சான்றுகளுடன் எழுதுவதற்கு மூலகாரணமான திரு.நா.தம்பிராசா அவர்கள் 17-01-2013 அன்று இயற்கை எய்தினார்.

"திருகோணமலை" என்ற பெயரைக் கொண்ட கல்வெட்டைக் கண்டு பிடித்துதவிய திரு தம்பிராசா அவர்களின் பணியினால் சுமார் 10ம் நூற்றாண்டிலேயே "திருகோணமலை" என்ற பெயர் வழக்கிலிருந்ததை வரலாற்று ரீதியாக உறுதிப்படுத்த முடிந்துள்ளது.

வரலாற்றினை ஆராய்ந்த பல பேராசிரியர்களுக்கு இவரது வழிகாட்டல்கள் பேருதவியாய் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

1970ம் ஆண்டு தொடக்கம் தனது தாயாரின் ஆதரவுடன் தமிழரின் வரலாற்று ஆதாரங்களைத் தேடி ஆவணப்படுத்திய இவரது ஆவணப் படுத்தல்களை இலங்கையினர் மட்டுமன்றி வெளிநாட்டவர்களும் வாசித்துப் பயனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தனது இறுதிக்காலம் வரை வரலாற்றை ஆய்வு செய்வதிலேயே செலவிட்ட திரு. தம்பிராசா அவர்கள் கடந்த திசம்பர் மாதம் 09ம் திகதி தனது மனைவி இறந்ததிலிருந்து சிறிது நோய் வாய்ப்பட்டிருந்தார். எனினும் சாவடையும் வரை எவ்வித அவதிகளுக்கும் ஆளாகாமல் அமைதியாகச் சாவடைந்ததாக அவரது மகன் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

வரலாற்றுத்துறை மட்டுமல்லாது தனது மனைவி திருமதி. மகேஸ்வரி அவர்களுடன் இணைந்து ஆத்திமோட்டை தமிழ் வித்தியாலயத்தை ஆரம்பித்து வைத்த பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.

பத்துக் குழந்தைகளுக்குத் தந்தையான திரு. தம்பிராசா அவர்கள் இலங்கையின் தலைவர்கள் பலரிடமிருந்து வரலாற்றுக்கு ஆற்றிய பணிகளுக்காகப் பாராட்டுக் கடிதங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(திரு. நா.தம்பிராசா அவர்கள் பற்றிய குறிப்பினை அறிய பக்கம் 4ற்குப் பயணிக்கவும்)



## கிளைகளைத் திறக்கும் தமிழரசுக் – கட்சி –

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பதின்மூன்று உள்ளூராட்சி மன்றங்களின் பிரதேசங்களில் தமிழரசுக் கட்சி தனது கிளைகளைத் திறக்கவுள்ளது.

மாவட்டத்தில் கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கையாகவே இம் முயற்சியை கட்சித் தலைமை மேற்கொண்டுள்ளது. (7ம் பக்கம்)

## காலனித்துவக் கால பீரங்கியைக் கண்டுபிடித்தனர் – கடற்படையினர் –

கிழக்குக் கடற்படையின் நீரடி நீச்சற் பிரிவின் சுழியோடிகள் (7ம் பக்கம்)



## கிழக்கு மாகாணசபையின் தீர்மானங்கள் செயலுருப் பெறுவதில்லை

### மாகாணசபை அமைச்சர் குற்றச்சாட்டு

கிழக்கு மாகாண சபையாலும் அதன் அமைச்சரவையாலும் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் வெறும் பேச்சுக்களாகவும் தாள்களிலும் மட்டுமே உள்ளதாக கிழக்கு மாகாண சபை அமைச்சர் கௌரவ ஹாபிஸ் நசீர் அகமட் அவர்கள் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

இந்நிலைமைக்கு முக்கிய காரணமாக அமைவது அத் தீர்மானங்களை நிறைவேற்றும் நடவடிக்கைகளை மாகாண ஆளுனர் மேற்கொள்ளாமல் இருப்பதாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆஸ்திரேலியப் பயணிகள் கைது !

கிளிநொச்சியிலிருந்து ஆஸ்திரேலியா நோக்கிச் செல்வதற்காக திருமலைக்கு வந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு ஒன்பது இளைஞர்கள் (7ம் பக்கம்)

## சுனாமி எச்சரிக்கைப் பயிற்சி – கிண்ணியாவில் !

அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மாவட்டங்கள் தோறும் முன்னெடுக்கப்பட்ட (7ம் பக்கம்)

aat SRI LANKA

2013 ஜனவரி பரீட்சைகளுக்கான மாணவர் பதிவுகள் தற்போது ஆரம்பம்

க.பொ.த. (சா/த) பரீசையில் 06 பாடங்களில் சித்தியெய்திய மற்றும் தற்பொழுது க.பொ.த (உ/த) கற்றுக் கொண்டிருக்கும் எந்தவொரு மாணவரும் பதிவுசெய்து கொள்ள முடியும்.

AAT பரீட்சைகள்

விண்ணப்பிக்கும் முறை



aat VEAL BUSINESS COLLEGE
VISIT US : 159 A, Sea View Road, Trincomalee. CALL US : 026 222 7622 / 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

**வணக்கம் !**

## சுதந்திர தின நாட்களில் சும்மாயிருக்கப்போகும் குழந்தைகள்!

சுதந்திர தின நாட்களில் திருமலையின் நகரப் பாடசாலைகளிற் பல பூட்டப்பட்டுக் கிடக்கப் போகின்றன.

அவ்வாறான காலப் பகுதிகளில் பெரும்பாலும் தனியார் கல்வி நிலையங்களும், பிரத்தியேக வகுப்புக்களும் நடைபெறுவது தான் வழமை. ஆனால் இம்முறை அதற்கும் வாய்ப்புக்கள் இருக்குமா என்பது தெரியவில்லை.

எனவே இக்காலப் பகுதியில் கல்வி கற்கும் மாணவச் செல்வங்களிற்கிருக்கும் ஒரே வாய்ப்பு தொலைக்காட்சியின் முன் தவம் கிடப்பது தான். பெரும்பாலான அரச அலுவலர்கள் கடமையின் பொருட்டு அலுவலகங்களிற்கோ அல்லது வேறு இடங்களிற்கோ சுதந்திர தினப் பணிகளிற்காக அமர்த்தப்பட்டிருக்கும் போது தனிமையில் விடப்படும் குழந்தைகளை எவ்வாறு கையாளப் போகின்றீர்கள் என்பது முக்கியமான விடயமாகவே உள்ளது. இக்காலப் பகுதிக்கு மட்டுமல்ல எந்தக் காலப்பகுதியிலாவது குழந்தைகளைத் தனியே விட்டுச் செல்லும் நிலை எமக்கு எழும்போது பின்பற்ற வேண்டிய விடயங்கள் எவை என்பதைத் தெரிந்து கொள்வது முக்கியமானதே.

பொதுவாகவே குழந்தைகளை ஊக்கப்படுத்தும் விடயங்கள் இரண்டு. முதலாவது அன்பான பாராட்டுக்கள் இரண்டாவது பரிசில்கள். எனவே குழந்தைகள் தனித்திருக்கும் காலப்பகுதியில் அவர்களுக்குப் பரிசளிக்கக்கூடிய விதத்தில் சிறு சிறு வேலைகளை அவர்களுக்காக விட்டுச் செல்லுங்கள்.

அவர்களுடைய நாளை நேரசூசிகைப் படி வகுத்துக் கொள்ளுங்கள். அந் நேர சூசிகைக்கு ஏற்ப அவர்களது வேலைகளை , விளையாட்டுக்களை திட்டமிட்டுக் கொள்ளுங்கள். அவர்களுடைய வேலைகளாக தமது உடைகளைத் தாமே மடித்து வைத்தல் , அவற்றை ஒழுங்காக உரிய இடத்தில் வைத்தல் அவர்களுடைய எழுத்தாணிப் பெட்டிகளை துடைத்தல், நீர்க் குடுவையை உப்பிட்டுச் சுத்தம் செய்தல் போன்ற சிறு சிறு வேலைகளை அவர்களுக்காக ஏற்பாடு செய்து வையுங்கள். அவர்கள் அக் கடமைகளைச் செவ்வனே செய்திருப்பின் நாளாந்தம் சிறிய சிறிய பரிசில்களை அவர்களுக்கு வாங்கிக் கொடுங்கள்.

வாசிப்பைச் செய்வதற்கு மறக்காமல் ஏற்பாடு செய்யுங்கள். அதற்கான நேரத்தை அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுங்கள். கட்டாயமாக அவர்கள் வாசிக்க வேண்டிய தேவையுள்ளது. வாசிப்பதை நீங்களே நெறிப்படுத்துங்கள்.

தொலைக்காட்சி பார்ப்பதையும் நேரசூசிகைக்குள் உட்படுத்துங்கள். அதைத் தவிர்க்க முயற்சிக்காதீர்கள். குழந்தைகளே எங்களின் எதிர்காலம் எனவே அவர்களின் ஒவ்வொரு நாளையும் . நாம் கவனமாகச் செதுக்குவோம். செதுக்குவோமா?

-ஆசிரியர்-

## பணத்தால் வறுமையே தவிர மனத்தால் வறுமைப்படவில்லை ரிசானாவின் தாயார்



தனது குழந்தையின் சிரச்சேதத்திற்குக் காரணமாயிருந்த சவூதிக் குடும்பத்தினரை தான் மன்னிப்பதாக ரிசானாவின் தாயார் ரபீனா நபீக் பி.பி.சி செய்திச் சேவைக்கு வழங்கிய தனது செவ்வியில் தெரிவித்துள்ளார்.

எனினும் தனது குழந்தையான ரிசானா குற்றமற்றவர் என்பதில் தான் மிகத் தெளிவுடையவளாக இருப்பதாகத் தெரிவித்த அவர் ஒரு நிரபராதியை தவறாகச் சிரச்சேதம் செய்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

சிரச்சேதம் செய்ய வேண்டும் என்பதில் கொல்லப்பட்டதாக் கூறப்படும் சிறு குழந்தையின் பெற்றோர் பிடிவாதமாக இருந்ததாலேயே தம்மால் ரிசானாவிற்கு மன்னிப்பை வழங்க முடியவில்லை என்று சவூதி அரசு தெரிவித்துள்ளது.

"இனி எவரை நொந்தும் பிரயோசனமில்லை - எனது பிள்ளை ரிசானா இறந்துவிட்டாள்" என்று தனது ஆற்றாமையைக் கண்ணீருடன் வெளியிட்டார் அவர். " ஊடகங்களிற் செய்தி வந்ததன் பின்னரேயே எமது மகள் சிரச்சேதம் செய்யப்பட்டமை எமக்குத் தெரியும். ஆகக் குறைந்தது சவூதி அரசாவது எமக்கு இவ்விடயத்தைத் தெரியப்படுத்தியிருக்க வேண்டும்" என்று தெரிவித்த அவர் ரிசானாவின் உடலத்தைப் பெற்றுக்கொள்ள எடுத்த முயற்சிகள் கூடக் கைகூடவில்லை என்று தெரிவித்துள்ளார்.

மொழிபெயர்ப்பாளரோ அல்லது சட்டவாதியோ இன்றித் தனித்து நின்ற ரிசானாவைக் கொலைக்குற்றச் சாட்டுக்குள்ளாக்கி சிரச் சேதம் செய்தமையை உலகளாவிய மனித உரிமை அமைப்புக்கள் கடும் கண்டனத்திற்கு உட்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஒரு பக்கச் சார்புடன் நிகழ்ந்த இத் தண்டனையில் முக்கிய பங்காற்றிய கொல்லப்பட்ட சிறு குழந்தையின் பெற்றோரை ரிசானாவின் தாயார் மன்னிப்பதாக தெரிவித்துள்ள போதிலும், இத் தண்டனையைத் தொடர்ந்து சவூதி அரசினால் வழங்கப்பட்ட வெகுமதித் தொகையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் வழங்கப்பட்ட 7,800 அமெரிக்க டொலர்களை அண்மையில் இலங்கையின் சனாதிபதியிடமிருந்து ரிசானாவின் குடும்பம் பெற்றுக் கொண்டது. அதன் போது கருத்தறிவித்த ரிசானாவின் தாயார் இளம் பெண்களை மத்திய கிழக்கிற்கு வேலைக்கனுப்புவதை அவர்களது பெற்றோர் இனியாவது நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கோரியிருந்தார்.

"அவர்கள் தமது குடும்பத்தின் வறுமையின் காரணமாகவே இவ்வாறான ஆபத்து மிக்க பயணத்தைத் தொடர்கின்றனர். எனவே சனாதிபதி நினைத்தால் பெண்களுக்கான வருமானம் ஈட்டும் வழிகளை உருவாக்கி அவர்கள் வெளிநாடு செல்வதைத் தடுக்க முடியும்" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கிராமிய நடனத்தில் தேசிய மட்டத்தில் வென்றது ஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலயம்

சமுர்த்தி அபிவிருத்தி அமைப்பினால் நடாத்தப்பட்ட கிராமிய நடனப் போட்டியில் திருக்கோணமலை-தம்பலகமம் ஆதிகோணேஸ்வரா வித்தியாலயம் தேசிய மட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்று மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது.

மாவட்ட மட்டப் போட்டிகளில் முதலிடத்தைப் பெற்று இப் பாடசாலை தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.எஸ்)



## கிழக்கிற்குப் புதிய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

திருக்கோணமலை பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளராகக் கடந்த இரு வருடங்கள் பணியாற்றிய திருமதி.கௌ. ஞானகுணாளன் அவர்கள் கிழக்கு மாகாணத்திற்கான சுகாதார சேவைகள் பணிப்பாளராகப் பணியுயர்த்தப் பட்டுள்ளார்.

கடந்த 15.01.2013 அன்றிலிருந்து அவர் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

பலவருடங்களாகப் பல்வேறு வைத்திய நிர்வாகப் பதவிகளை வகித்து வந்த இவர் போர்க்காலங்களில் கடுமையான நெருக்குதல்களுக்கு உள்ளாகியிருந்த போதும் தனது பணிகளை மெச்சத்தக்க வகையில் நிறைவேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## நெருப்புப் பற்றிய மீன்பிடிப்படகை மீட்டது கடற்படை

அம்பலாங்கொடையிலிருந்து மீன்பிடிப்பதற்காக வந்து திருமலைக் கடற்பிரதேசத்திற்கு அப்பால் நங்கூரமிட்டிருந்த ரோலர் படகொன்றில் கடந்த 08ம் திகதி நெருப்புப் பற்றிக் கொண்டது.

பிரதான கட்டுப்பாட்டறையின் இயந்திரப் பொறிமுறையில் ஏற்பட்ட தவறால் நெருப்புப் பற்றியுள்ளது.

7 மீன்பிடியாளர்கள் அத்தருணத்தில் நெருப்புப்பற்றிய மீன்பிடிப்படகான "சுது ருவான்" படகில் இருந்துள்ளனர். இவ்விடயம் கிழக்குக் கடற்படையின் திருமலைக் கட்டளைப் பணியகத்திற்குத் தெரியவரவே உடனடியாக அதிவேக கடற்படைப் படகொன்று விரைந்து போய் மீன் பிடியாளர்களை மீட்டு வந்துள்ளது.

அதன் பின்னர் கடற்படையின் "ஜெகத்" கப்பலானது தலத்திற்கு விரைந்து பழுதடைந்த மீன்பிடிப் படகை திருமலைத் தளத்திற்கு இழுத்து வந்துள்ளது.



## பெருந்தெருவில் பெரிய குழி

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெருந்தெரு விக்நேஸ்வரா மகா வித்தியாலயத்துக்கு முன்னால் மத்திய வீதியில் பெரும் குழியொன்று ஏற்பட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நீர்க் குழாயில் ஏற்பட்ட வெடிப்பின் காரணமாக குறித்த குழி உருவாகியதாகவும் தொடர்ந்து நிலத்தினுள் ஊறிய நீரினால் அதையண்டிய பக்கங்கள் நிலத்தினுள் இறங்கியதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இந்நிலையில் பிற்பகல் 1.30 மணிக்குப்பின்னர் இவ்விடயம் வெளித் தெரியத் தொடங்கிய பின் குறித்த பகுதி பரபரப்பில் ஆழ்ந்திருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.



## மூதூரில் கையெழுத்துப் பதிவுகள்

பெண்கள் வெளிநாடு செல்வதை தடுக்கக்கோரி மூதூரில் கையெழுத்துக்கள் பெறப்பட்டுள்ளன. பெண்கள் வெளிநாடு செல்வதால் ஏற்படும் பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வரும் பொருட்டு பத்தாயிரம் பேர்களின் கையெழுத்துக்கள் அடங்கிய கோரிக்கையை அரசாங்கத்துக்கு அனுப்பிவைக்க இக்கையெழுத்துக்கள் பெறப்பட்டுள்ளது. மூதூர் பீஸ்கோம் நிறுவனம், மஜ்லில் அஸ் - ஹிறா, உலமாசபை, கதீப்மார்கள் நலன் புரிச்சங்கம் என்பன இணைந்து இக்கையெழுத்துத் திரட்டலை நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை மாவட்டத்தில் 18 பாடசாலைகள் மூடப்படவுள்ளன.

எதிர்வரும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு திருமலை மாவட்டத்திலுள்ள பதினெட்டுப் பாடசாலைகள் 28ம் திகதிக்கு பின்னர் தற்காலிகமாக மூடப்படவுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மீள இப்பாடசாலைகள் எதிர்வரும் 5ம் திகதி தொடக்கம் கல்வி நடவடிக்கைகளுக்காகத் திறக்கப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் திருமலைக் கடற்கரையில் நடைபெறவுள்ளதால் இவ்வாறு பாடசாலைகள் மூடப்படவுள்ளன. இவ்வாறு மூடப்படுவதால் ஐந்து பாடசாலை நாட்களே மொத்தமாகப் பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் எனத் தெரியவரு கின்றது.

இவ்வைந்து நாட்களையும் அடுத்துவரும் சனிக் கிழமையான பெப்ரவரி மாதத்தின் 09ம் திகதி தொடக்கம் மார்ச் மாதத்தின் 9ம் திகதி வரையான ஐந்து சனிக்கிழமைகளில் நடாத்தி முடிக்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறிருக்க 24.01.2013ன் மதிய நேரத்தில் வீசிய கடுங் காற்று கடற்கரையோரத்தில் சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்காக இடப்பட்டிருந்த கொட்டகையொன்றைப் பெயர்த்து விழுத்தியுள்ளது.

# திருமலை ஊடகவியலாளர்களுக்கு மூன்று நாள் பயிற்சிக் கருத்தரங்கு

திருமலையில் தேர்வு செய்யப்பட்ட இருபத்தியொரு ஊடகவியலாளர்களுக்கான வதிவிடப் பயிற்சிக் கருத்தரங்கொன்று சேச் போர் கொமன் கிறவுண்ட் என்னும் நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.

கடந்த 18, 19, 20ம் திகதிகளில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் மனிதவுரிமைச் செயற்பாட்டாளர் வாசுகி மற்றும் ஊடகவியலாளர் தொட்டவத்த மற்றும் ஐயூப் ஆகியோர் விரிவுரைகளை ஆற்றியிருந்தனர்.

# உள்ளூராட்சி எல்லை மீள் நிர்ணயத்தில் முஸ்லிம்கள் பாதுகாக்கப்பட வேண்டும்

## திரு. சம்பந்தன்

கிழக்கின் உள்ளூராட்சி எல்லைகளை மீள் நிர்ணயம் செய்யும் போது முஸ்லிம்களைப் பாதுகாக்க வேண்டும் என சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை எல்லை மீள் நிருணயம் தொடர்பாகக் கலந்துரையாடிய போது "தமிழர் பிரச்சினைக்கு கௌரவமான ஒரு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று விருப்பம் சிங்கள மக்கள் மத்தியில் கணிசமானவர்கள் இடையே காணப்படுகின்றது. முஸ்லிம் மக்களும் அவ்வாறே விரும்புகின்றனர்.

கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தலில் 11 ஆசனங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு 7 ஆசனங்கள் மாத்திரமே கிடைத்தன. நாம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியை தருகின்றோம் என்று பகிரங்கமாக கூறினோம்.

எனினும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதனை ஏற்க முன்வரவில்லை. துரதிஸ்டவசமாக முஸ்லிம்களின் அரசியல் தலைமை அதற்கு ஆதரவாக காணப்படவில்லை. முஸ்லிம் தலைமை வேறு பல காரணங்களுக்காக அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவதையே விரும்புகின்றார்கள் என்றே தோன்றுகின்றது.

முஸ்லிம் அரசியல் தலைமையின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு முஸ்லிம்களின் கைகளில் தான் தங்கியுள்ளது. இனப் பரம்பலை மாற்றாத விதத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் வட்டார எல்லைகள் மீள்நிர்ணயம் செய்யப்பட வேண்டும்" என்று திரு சம்பந்தன் தெரிவித்திருந்தார்

# கிழக்கு மாகாண சபையில் ஒரு நிமிட மௌனம்

கிழக்கு மாகாண சபையின் புதிய ஆண்டின் முதலாவது அமர்வு கடந்த 22.01.2013அன்று ஆரம்பமானது.

அவ்வமர்வில் மாகாண சபை உறுப்பினர் திரு. அன்வர் அவர்கள் "ரிசானா தண்டனைக்குட்படுத்தப் பட்டமையானது எம்மையும் நாட்டு மக்களையும் மிகுந்த வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது. இவ்விடயம் தொடர்பாகப் பாராளுமன்றில் ஒரு நிமிட நேர அஞ்சலி செலுத்தப்பட்டதைப் போலவே எமது மாகாண சபையிலும் அஞ்சலி செலுத்தப்பட வேண்டும்" என்ற கோரிக்கையை வைத்தார். அதற்கமைய ஒரு நிமிட அஞ்சலி ரிசானாவிற்காகச் செலுத்தப்பட்டது.





கடந்த சில வாரங்களாக திரியாய் குன்றின் மறைக்கப்பட்ட வரலாற்றைத் தேடி பயணிக்கும் நாம் சென்ற வாரம் இக் குன்றில் தலம் (குறிப்பு 1) ஒன்று அமைய காரணமாக இருந்த பல்லவர்களை பற்றி அலசினோம்....

வாருங்கள் மீதமுள்ள பகுதிகளுக்கும் சென்று வருவோம்....

சிறிய தூரம் சென்ற உடன் இன்னும் ஒரு சிங்கள அறிவித்தல் பலகை! காட்டப்பட்ட திசை நோக்கிச் சந்தேகத்துடன் சென்றோம். அது ஒரு இயற்கையாக அமைந்த ஒரு சிறிய கற் குட்டை(பார்த்தால் புரிந்து விடும்) ஆனால் அதற்கு ஏதோ ஒரு கதை சிங்களத்தால் எழுதப்பட்டு இருந்தது.

பிறகு படிக்கட்டுகளுக்கு வந்து சிறிய தூரம் சென்ற போது ஒரு இடிபாடு அடைந்த சிறிது திருத்தப்பட்ட ஒரு வட்ட வடிவமான வணக்கத்தலம் குன்றின் உச்சியில் காணப்படுகிறது. சில திருத்தங்களுடன் அது மிகவும் கவனமான முறையில் பராமரிக்கப் படுகிறது.



அது ஒரு புத்த வணக்கத்தல வடிவமைப்பை கொண்டுள்ளது இதனை சுற்றி கற்தூண்கள் கூட்டம் கூட்டமாக காணப்படுகிறது. ஒரு கட்டிட அத்திவாரத்தில் உடைந்த ஒரு புத்தனின் சிலையும் காணப்பட்டது. அக் கட்டிடங்கள் பற்றி அங்கு இருந்த ஒரு பிக்குவிடம் விசாரித்த போது பண்டைய காலத்தில் புத்த சாதுக்கள் தங்கும் மடாலயங்கள் தான் அவை என்று கூறினார்.

அதுமட்டும் அல்லாது அங்கு ஒரு அரச மரக்கன்று நடப்பட்டு கூண்டினால் அடைக்கப்பட்டு ஒரு அறிவித்தல் பலகையும் போடப்பட்டு இருந்தது.அப்படி அறிவித்தல் பலகை போடுமளவுக்கு அந்த அரச மரம் என்ன முக்கியத்துவம் வாய்ந்தது????

முக்கியம்தான்.. சங்கமித்தையும் மகிந்த தேரரும் வட இந்தியாவிலிருந்து கொண்டு வந்து இலங்கையில் (அநுராதபுரம்) நாட்டிய போதிமரத்தின் கிளையில் இருந்து உருவாக்கப்பட்ட மரம்தான் அது.

அதனைச் சுற்றிப்பார்த்துவிட்டு கொஞ்ச தூரம் சென்றபோது ஒரு சிறிய பாதை செல்வதை பார்க்கக்கூடியதாக இருந்தது நாங்கள் அங்கு சென்ற போது அழிவடைந்த ஒரு கட்டிட அத்திவாரங்களை காணக்கூடியதாக இருந்தது.

நாங்கள் அந்த அத்திவாரங்களை பார்க்கும் போது ஏதோ ஒரு கட்டிட அமைப்பை நினைவு படுத்திக் கொண்டு இருந்தது. கட்டிட அமைப்பை தவிர்த்த அதன் பாதை ஏதோ வழமையாக இடத்தில் நாங்கள் சுற்றி செல்லும் பாதை போல இருந்தது. செல்லச் செல்ல புரிந்து கொண்டோம், எங்கள் அறிவுக்கு எட்டியவரை அது ஒரு சைவ வழிபாட்டு தலம் தான்.

ஒப்பீட்டளவில் பாரத்தால் நன்றாக பராமரிக்கப்படும் புத்த தலத்தை விட இக்கட்டிட எச்சம் பெரியது.

அக் கட்டிட எச்சத்தில் சில பகுதிகள் பிரித்து எடுக்கப்பட்டு வேறு கட்டிட எச்சங்களுடன் சேர்க்கப் பட்டுள்ளது. இதனை எப்படி நாங்கள் புரிந்து கொண்டோம் என்றால், இக் கட்டிட அமைப்புக்கு கொஞ்சம் அருகில் இன்னும் ஒரு கட்டிட அமைப்பு காணப்படுகிறது. அது ஒரு பண்டைய மனிதர்களின் தங்கும் இடமாக இருந்திருக்க வேண்டும். ஏன் என்றால் அவைகளில் [illegible] காணப்படுவதுடன் பண்டைய கால கல்லால் ஆன மலசலகூடங்கள் கூட காணப்பட்டது. அவற்றில் சில மலசலகூடங்கள் கோவில் அமைப்பை ஒத்த கட்டிட அமைப்புடன் கலக்கப் பட்டுள்ளது. மேலே நாங்கள் கண்ட காட்சிகளில் ஏன்? எதற்கு? என்ற கேள்விகள் உங்களுக்கும் என்னைப் போல எழலாம். அது ஒரு பக்கம் இருக்கட்டும். நாங்கள் இந்த பயணத்தினதும் அதன் காரணமாக தொடங்கிய தேடல்களினதும் முடிவுக்கு வருவோம்.

கடந்த வாரம் பார்த்தது போல பல்லவர்கள் சிறந்த அரசியல் வல்லுனர்கள், அதுவும் அவர்கள் எழுச்சி பெற்ற காலப்பகுதியில் மிகச்சிறந்த வியாபார அரசியலை செய்தனர். முக்கியமாக இலங்கையில் தங்களது வியாபார நடவடிக்கைகளை சீராக கொண்டு செல்ல மிதவாத மத அரசியலை சீராக மேற்கொண்டனர். அப்படி மேற்கொண்ட வியாபார நடவடிக்கையின் சான்றுதான் இந்த திரியாய் குன்று.

இக் குன்றின் உருவாக்க காலமாக கருதப்படும் கி.பி 7-8 நூற்றாண்டு காலப்பகுதி பல்லவ ராச்சியம் சவாலுக்குரிய மதப் பூசல்களை சந்தித்தது. இப்போது கூட அக்காலப்பகுதியில் எழுந்த சமய சார்பு வரலாறுகளை படித்தால் சமண பௌத்த சைவ சமயங்களுக்கு இடையே மதச் சண்டைகள் இடம் பெற்றதாக நமக்கு தோன்றும்.

அதை நாம் இலகுவாக புரிந்து கொள்ள வேண்டுமானால் இலங்கையில் வெளியிடப்படும் பாடசாலை மாணவர்களுக்கான சைவ சமய பாடப் புத்தகத்தில் நுண் உயிர்கள் கூட தங்களால் சாவடைய கூடாது என்பதற்காக மயில் இறகால் நிலத்தை நீவி நடக்கும் தமிழ் சமண துறவிகள் பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்பட்டு இருப்பர். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் சமணர்கள் போல சவாலாக இருந்த பௌத்தர்களை பற்றி எதுவுமே அப் புத்தகங்களில் இருக்காது.

ஒரு வேளை இலங்கையில் சிங்கள சமணர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்திருந்தால் நம் சைவ பெரியவர்களால் சமணத்துக்கு பதில் பௌத்தம் சேர்க்கப்பட்டிருக்குமோ?


இன்னும் நடுவோம் ..

குறிப்பு 1 -

இத்தலத்தை பற்றி ஏற்கனவே வரலாற்று ஆராய்ச்சிகள் தங்கேஸ்வரி கதிராமன் (முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்) அவர்களால் செய்யப்பட்டு உள்ளதாக இணையத்தில் படித்தேன். அவ் ஆராய்ச்சிக் குறிப்புகளை ஆவணப் படுத்தினால் நமது வரலாறுகளை நாம் பாதுகாப்பதற்கு உதவியாக இருக்கும்.

யாரிடமாவது அவ் ஆராய்ச்சி குறிப்புகள் இருந்தால் பகிருங்கள்.

(கா.செந்தூரன்)



சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்
குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்
1929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண் பயனுற வாழ்ந்த ஆசான்

# திரு. நா. தம்பிராசா அவர்கள்

**- கலாநிதி. கா. சரவணபவன் -**

திருகோணமலையின் வரலாறுகள் அடங்கிய கல்வெட்டுக்களை தேடித்தேடிக் கண்டுபிடித்து அவற்றை உரியவர்களைக் கொண்டு வாசித்து வெளியிடச் செய்து திருகோணமலையின் வரலாற்றை உறுதியான சான்றுகளுடன் எழுதுவதற்கு மூலகாரணமான திரு.நா.தம்பிராசா அவர்கள் 17-01-2013 அன்று காலமானார்.

இவரைப்பற்றி வரலாற்றுத் திருகோணமலை மற்றும் காலனித்துவ திருகோணமலை ஆகிய நூல்களை எழுதிய கலாநிதி கனகசபாபதி சரவணபவன் அவர்களின் குறிப்பு

1970களுக்கு முன்னர் திருகோணமலையின் வரலாறு வெறும் நாட்டார் கதைகளினாலும் , புராணங்களினாலுமே கட்டப் பட்டிருந்தது. மிகப் பெரிய சோழர்களின் எழுச்சியினால் எழுதப்பட்டிருந்த இந்த மண்ணின் வரலாற்றுச் சித்திரங்கள் புதையுண்டு கிடந்தது.

தொகுத்துப்பார்த்து ஒரு வரலாற்றுப் பாரம்பரியத்தை எமது இளைய தலைமுறைக்கு சொல்ல முடியாதளவிற்கு இந்த மண் குறித்த தொடர்ச்சியான அறிவு உருவாக்கப் படவில்லை. கல்வெட்டுக்கள் வாசிப்புக்கு உட்படுத்தப்படாமல் வெறும் கற்தூணாக சாய்ந்து கிடந்தன. விழிப்புணர்ச்சியின்றி சமூகம் அக்கறையற்று வாழ்ந்த காலத்தில் வரலாற்றைத் தேடிய ஒரு மனிதன் மதிப்பிற்குரிய நா.தம்பிராசா அண்ணர் அவர்கள்.

சோழர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள் வந்தார்கள் சென்றார்கள் என்ற அறிவே இல்லாத காலத்தில் சோழர்களை தேடி ஆராய்வதில் உறுதியான காரணங்களை தேடி அவர் ஆரம்பித்த பயணம்தான் இன்றும் பல்கலைக் கழகங்களில் தொடர்கின்றது. வரலாற்றாய்வு என்ற நீண்ட பயணத்தின் முதல் காலடி அவருக் குரியது.

சோழர் கால திருகோணமலை நிர்வாக அமைப்பை புரிந்துகொள்வதற்கு திருகோணமலையில் கிடைக்கப் பெற்ற



கல்வெட்டுக்களே காரணமாக உள்ளன. திரு. தம்பிராசா அண்ணர் அவர்கள் தனிமனிதனாக திருகோணமலை வரலாற்றுத் தடங்களை தேடிக் கண்டறிந்தார். பேராதனைப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளராக பணியாற்றிய கலாநிதி செ.குணசிங்கம் அவர்கள் அவரது முதுநிலை பட்டத்திற்கான ஆய்வுத் தளமாக கோணேஸ்வரத்தை தேர்ந்தெடுத்திருந்தார்.

இது 1970களின் ஆரம்ப காலமாகும். பல்கலைக்கழகத்திற்கு வெளியே இருந்தவாறு பல்கலைக்கழக வரலாற்றுத்துறைக்கு தேவையான ஆய்வுகளை திரு தம்பிராசா அண்ணர் செய்தார்.

அவரால் வெளிச்சம் பாய்ச்சப்பட்ட கல்வெட்டுக்களில் இருந்தே இலங்கையில் சோழர்கால ஆட்சி குறித்த வரலாற்றுச் சித்திரத்தை வரலாற்று ஆய்வாளர்களால் தீட்ட முடிந்தது. அவற்றுள் கந்தளாய் விஸ்வநாதர் சிவன் கோயில் கல்வெட்டு, பெரிய குளம் கல்வெட்டு, மாங்கனாய் கல்வெட்டு, பளமொட்டைக் கல்வெட்டு, பத்திரகாளி அம்மன் கல்வெட்டு, நிலாவெளி பிள்ளையார் கோயில் கல்வெட்டு, கங்குவேலி கல்வெட்டு, தம்பலகமம் ஐயனார் திடற் கல்வெட்டு, வில்லூன்றி கந்தசாமி கோயில் கல்வெட்டு என்பன முக்கியமானவை. கலாநிதி செ.குணசிங்கம், பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் கா. இந்திரபாலா ஆகியோர் என அவரது ஆதரவும் உதவியும் பெற்ற வரலாற்றுப் பேராசான்களின் பட்டியல் தொடரும். எனது "வராலாற்றுத் திருகோணமலை" தொடர்பான ஆய்வுகளை 2000 இன் ஆரம்பத்தில் செய்த போது அவரது உதவிகள் எனக்கு தேவைப்பட்டது.

அவரது வரலாற்று ஆர்வம் அறிந்து ஆச்சரியப்பட்ட நிகழ்வுகள் அதிகம். இயல்பாகவே இந்த மண்ணை உயிர் மூச்சாக எண்ணிய அவரது பேச்சில் வீச்சாக வந்து விழும். ஒரு வரலாற்று ஆய்வாளனுக்குரிய கல்வி ஒழுக்கம் அவரிடம் நிரம்பியிருந்தது.

அவர் வெளிச்சம் பாய்ச்சி வெளி உலகிற்கு தெரியப்படுத்திய கல்வெட்டுக்களில் கந்தளாய்க் கல்வெட்டு, மானாங்கேணிக் கல்வெட்டு, நிலாவெளிக் கல்வெட்டு என்பன மிகச் சிறப்பானவை.

பத்தாம் நூற்றாண்டுக் குரியதாக கருதப்படும் நிலாவெளிக் கல்வெட்டிலேயே "திருகோணமலை" என்ற சொல் முதன்முறையாக பயன்பட்டிருப்பதை அறிய முடிந்தது.

திரு. தம்பிராசா அண்ணர் அவர்கள் இது குறித்து மிக அடக்கத்தோடு பல விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார். தான் வாழ்ந்த மண்ணின் மூலவேர்களை, அதன் மண்வாசனையை எதிர்கால சந்ததியினரும் தொட்டுணர்ந்து மகிழ வேண்டும் என தன் இளமைக்காலத்தை அர்ப்பணித்த ஒரு வரலாற்றுப் பெருந்தகை.

பேராசிரியர்கள் வரிசையில் நின்று எழுதப்படாமல் மண்ணில் புதைந்து கிடந்த திருகோணமலை வரலாற்று தடயங்களை தேடி ஒரு வரலாற்றைக் கட்டியெழுப்ப அவர் ஆற்றிய பங்கு காலத்தால் அழியாத புகழை அவருக்கு சேர்க்கும். மண் பயனுற வாழ்ந்த ஆசான் அவர்.

திருகோணமலையின் வரலாற்றையும் இலங்கையில் சோழராட்சியின் வராலற்றில் முக்கால்வாசியையும் இலங்கையின் 10 தொடக்கம் 12ம் நூற்றாண்டு வரையான காலத்தின் வரலாற்றை எழுத பேருதவி புரிந்த அன்னாருக்கு எனது அஞ்சலிகள்.

முன்னாள் சாம்பல்த் தீவு கிரோமேதய சபைத்தலைவராக இருந்த அன்னாரின் உதவியால்த்தான் கலாநிதி. செ.குணசிங்கம், பேரா.கா.இந்திராபாலா, பேரா.பத்மநாதன் ஆகியோரின் ஆய்வுகள் முக்கியப்பட முடிந்தது.. வரலாற்றின் கடமையை தன்னால் இயன்ற அளவு செய்தவரை நாமும் நினைவில் வைத்திருப்போமாக

**கலாநிதி.க. சரவணபவன்**

# எமதூர் திருக்கோணமலை

அடுக்குகை: தில்லைநாதன் பவித்ரன்

மலை, திருமலை, கோணமலை, திருகோணமலை, திருக்கோணமலை, கோணேஸ்வரபூமி என பலபெயர்களால் வழங்கப்பட்டுவரும் எமது ஊரான திருக்கோணமலையின் சிறப்பு அக்காலமிருந்தே கண்டங்கள் கடந்து எட்டியிருந்த தென்பது மெய்க்குப் புறம்பானதாக இருக்கமுடியாது.

தான் கொண்ட பெயருக்கு ஏற்ப சிறப்பும், புனிதமும் கொண்ட துறைமுக நகரின் பெயருக்கான காரணங்கள் பல்வேறு வகையானவையாக சொல்லப்பட்டு வருகின்றன. இதற்கிடையில் திருக்கோணமலையா, திருகோணமலையா என்ற விவாதங்களும் ஆங்காங்கே இடம் பெறத்தான் செய்கின்றது.

கிழக்கின் கரையோரம் வங்காள விரிகுடாக்கடல் பரந்து வெறிக்கும் நீண்ட இயற்கைத்துறைமுகத்தை தன்னகத்தே கொண்ட இவ்வூரின் பெயருக்கான காரணங்களை வாய்மொழி, மொழியியல் வரலாறு, புராணக்கதை என்பன மூலம் விளம்ப எத்தனிப்பதாக கீழ்வரும் பத்திகள் அமைகின்றன.

இதில் மிக முக்கியமாக ஆரம்பத்திலேயே ஆராய வேண்டிய விடயமாக "க்" பிரச்சனை அமைகிறது. சிலர் திருகோணமலை என வழங்கிவரும் அதேவேளை இன்னும் பலர் திருக்கோணமலை என பேச்சிலும் எழுத்திலும் குறிப்பிடுகிறார்கள். இதை இலக்கண அடிப்படையில் பார்ப்போமானால். திரு + கோணமலை என்பவற்றை புணர்த்தும் போது "கோ" என்ற எழுத்திலிருந்து "க்" தோன்றிவிடுகிறது. இங்கு திரு எனும் பகுதியையும் கோணமலை எனும் விகுதியையும் இணைக்கும் போதான புணர்வில் தோன்றும் "க்" பேச்சொலிக்கும் சிறப்பை, சந்தத்தை கொடுப்பதை உச்சரித்துப் பார்த்தால் தெரியும்.

மிகச் சுலபமாய் சொல்வதென்றால் வாழை + பழம், வாழைபழம் என்று எழுதவோ உச்சரிக்கவோபடுவதில்லை அது வாழைப்பழம் என்றே சொல்லப்படுகின்றது.

எனவே திருக்கோணமலை என்பதே இலக்கண அடிப்படையிலும் சரியாக இருக்க முடியும். ஈழத்தில் இவ்வாறு மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருக்கேதீச்சரம், முன்னேச்சரம் என இன்னும் பலவூர்களது பெயர்களில் க்,ப்,ச், என்ற எழுத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளது இவ்விடத்தில் சுட்டிக்காட்ட தகுதி உடைய ஒன்றாக இருக்கமுடியும்.

இனி திருக்கோணமலை என பெயருக்கான காரணம் வாய்மொழி மூலம் மக்களிடையே பரவலடைந்த விதத்தை நோக்கினால் மூன்று மலைகளால் சூழப்பட்டதால் இப்பெயர் வந்ததாக வாய்மொழிமூல நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. இக் கூற்றுப்படி உவர்மலை, கோணேசர் மலை (சுவாமி மலை), நெவில்மலை (மனையாவளி மலை) ஆகிய மும்மலைகளுமே ஆதாரங்களாக நிறுவப்படுகின்றன. மூன்று என்பது "திரி" எனவும் கொள்ளப்படுவதால் இம் மூன்று மலைகளும் திரிகோணமலையெனப்பட்டு பின்னர் அது திருகோணமலையானதாக முன்மொழிவுகள் சொல்லப்படுகின்றன. இத்தகைய வாய்மொழி மூல கடத்தல்கள் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளத் தக்கதாயிருந்தாலும். மொழியியல் மற்றும் புராண சம்பவங்கள் பெயருக்கான ஊன்றாதாரங்களை வலிமையாக வெளிப்படுத்துவதை காணலாம்.

இது இவ்வாறிருக்கையில் கோணேஸ்வரத்தை மையமாக கொண்டே திருக்கோணமலை எனும் பெயர் வந்ததாக கூறும் மொழி மற்றும் புராணக்கதைகளின் பக்கம் சென்று பார்ப்போமானால் சிவாலயமாக கருதப்படும் கோணேஸ்வரம் "பிராகிருத" மொழியில் "கொணாமலை" எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவுக்கு முன் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் இம் மொழியிலிருந்தே "சமஸ்கிருத"மொழி வந்ததாக சொல்லப்படுகின்றது. அதாவது கி.மு.4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாணினி என்ற அறிஞரின் செம்மைப்படுத்தலே பிராகிருத மொழியிலிருந்து சமஸ்கிருதத்தை தோற்றுவித்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

இப் பிராகிருத மொழியில் கொண என்பது எருது என குறிக்கின்றது எனவே கொணமலை என்பது "எருதுமலை" எனப் பொருள்பட்டது. ஆரியர் பயன்படுத்தியதாக சொல்லப்படும் இவ் பிராகிருத மொழியின் அடிப்படையில் பார்த்தால் கோணேஸ்வரம் ஆரியர்களுக்கு முட்பட்ட இனக்குழுமத்தால் பேணப்பட்ட ஆலயம் என்பது தெளிவாகும். இவ்விடத்தில் தான் மத்திய ஆசியாவிலிருந்து இடம் பெயர்ந்த ஆரியர் திராவிடர்களை வெற்றி கொண்ட செய்தியை குறிப்பிடவேண்டும். எனவே இலங்கையிலும் ஆரியருக்கு முற்பட்ட திராவிடர்கள் வாழ்ந்துள்ளனர் என்பது புலனாவதோடு பழந்தமிழராகிய அவர்கள் எமது திருமலை மண்ணிலும் வாழ்ந்த எமது முன்னோர்களாயும் இருந்திருக்க வேண்டும். திராவிடரின் பின் வந்த ஆரியர்கள் இந்திரன், வருணன், அக்கினி ஆகிய தெய்வங்களை வணங்கியதோடு திராவிடரை போல சிவ வழிபாட்டிலும் ஈடுபட்டவர்கள் இவர்கள் சிவனை "ஈஸ்வர" என்று குறிப்பிடுகின்றனர். எனவே பிராகிருத சொற்களான கொண, ஈஸ்வர ஆகிய இணைந்து கொணா ஈஸ்வரம் ஆகியுள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டதைபோல கொணமலை, எருதுமலை எனப்பட்டதன் காரணம் சிவபெருமான் இடபமாகிய எருதை கொண்டிருந்தமையாகும்.

எனவே ஆரம்பத்தில் கொணமலை எனப்பட்டு கொணா ஈஸ்வரம் எனப்பட்ட எமதூர் பின்னர் திரிபுற்று இதன் புனிதம் காரணமாக திருக்கோணமலையாக மாறியுள்ளமை தெளிவாகிறது. எதுவாயிருப்பினும் இவ் வரலாற்றுப் பெயர் வரக்காரணமும் அதன் மையமும் கோணேஸ்வரத்தை அடிகோழியது என்பது தெளிவாகின்றது. மொழி ரீதியான வரலாறுகள் இவ்வாறு இருக்கையில் புராண ரீதியான வரலாறுகள் திருக்கோணமலையின் வரலாற்றை மற்றொரு கோணத்தில் வடிநிலைப்படுத்துகின்றன.

புராண கதைகளின் அடிப்படையில் ஆதிசேசனுக்கும், வாயு பகவானுக்கும் ஏற்பட்ட சண்டையின் காரணத்தால் கைலாயமலையிலே தெற்கில் திரிகோண சிகரம் ஒன்று சிவபெருமானின் கட்டளையால் பிரம்மனால் உருவாக்கப்பட்டதாகவும் அவற்றுள் தென்சிகரம் ஈழநாட்டின் கிழக்குக்கரையில் தென்கைலாயம் என நிறுவப்பட்டதாகவும் கூறப்பட்டு வருகின்றது. எனவே தான் திருகோணமலை தட்ஷிண கையாலயம் எனவும் அழைக்கப்பட்டுள்ளது. (இப் புராணக்கதையை மிக மிக சுருக்கமாக இப்பந்தியில் சொல்லியுள்ளேன்)

இப்புராண கதையின் படி மூன்று சிகரங்களில் ஒன்று என்பதால் திரிகோணமலை என்றும் வாயுவால் திரிக்கப்பட்டதால் திரிகோணமலை எனவும் பெயர் பெறப்படுகிறது. எனினும் வாயு பகவானால் பிரிக்கப்பட்டதாக சொல்லப்படும் மூன்று மலைகளும் புனிதம் காரணமாக திரு என அடைமொழிப்படுத்தப்பட்டுள்ளதை காணலாம். தொண்டை நாட்டில் வைக்கப்பட்ட சிகரம் திருக்காளத்தி எனவும், சோழ நாட்டில் வைக்கப்பட்ட சிகரம் திருச்சிராப்பள்ளி எனவும், ஈழநாட்டில் வைக்கப்பட்ட சிகரம் திருக்கோணபருவதம் எனவும் பெயர் பெற்றுள்ளது. இங்கு பருவதம் என்பது மலை ஆதலால் பருவதம் காலப்போக்கில் திருக்கோணமலை எனப் பெயர்பெற்றது. எனவே ஒட்டு மொத்தமாக முவ்வகையான விதத்தில் நோக்கும் போதும் எமது ஊரின் பெயரானது. திருக்கோணேஸ்வரத்தை சுற்றியே அமைந்துவிடுகின்றமை தெளிவாகின்றது.

வரலாற்றடிப்படையில் தொன்மையையும் புராண அடிப்படையில் புனிதத்தையும் கொண்டுள்ள எமது திருக்கோணமலையின் சரிதத்தை சரித்திரம் கடந்தும் பேணவேண்டியது எமது அனைவரதும் கடமையாய் இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வலம்

## - பெண் இராணுவம் போர் முன்னரங்கில் -

போர் முன்னரங்கச் செயற்பாடுகளில் பெண் இராணுவத்தினர் ஈடுபடுவதைத் தற்போது வரை தவிர்த்திருந்த அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அத்தடையைத் தற்போது நீக்கியுள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சரான லியோன் பெனட்டா இம்முடிவை எடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இம் முடிவினால் இலட்சக் கணக்கான முன்னரங்கத் தொழில் வாய்ப்புக்களையும் இலகு கமாண்டோ தாக்குதல் பிரிவுகளில் பணியாற்றும் தொழில் வாய்ப்புக்களையும் அமெரிக்க இராணுவப் பெண் அணியினர் பெற்றுக் கொள்கின்றனர்.

எனினும் அமெரிக்க இராணுவம் தனது முன்னரங்கக் கட்டமைப்பில் மிக முக்கியமான இடங்கள் எனக் கருதும் பதவிகளுக்குப் பெண்களை நியமிப்பதில்லை என்ற தனது நிலைப்பாட்டை 2016ம் ஆண்டு வரை நீடித்துள்ளது.

உடனடியாக செயற்படும் வண்ணம் பெண்கள் இராணுவ முன்னரங்கச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டாலும் இராணுவ விசேட அணிகளான டெல்டாப் படையணி மற்றும் பல்லூடகப் படையணி (சீல்ஸ்) போன்றவற்றில் பெண்களை உடனடியாக இணைத்துக்கொள்வது சாத்தியமில்லை எனத் தெரியவருகின்றது.

## மீண்டும் அனுகுண்டுப் பரிசோதனை முயற்சி வடகொரியா திட்டம்

மூன்றாவது அணுகுண்டுப் பரிசோதனையை நிகழ்த்தும் முயற்சியில் வடகொரியா இறங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வடகொரியாவின் உயர் இராணுவத் தலைமையை மேற்கோள் காட்டி வெளியாகியுள்ள இச்செய்தியில் "உயர் மட்ட அணுப் பரிசோதனை'' முயற்சியுடன் மிக நீண்ட தூரத் தாக்குதல் ஏவுகணையொன்றையும் பரீட்சிக்கவுள்ளதாக வட கொரியா தெரிவித்துள்ளது.

வடகொரிய அணுப் பரிசோதனைக்கு எதிராக மேற்குலகு திரண்டுவரும் வேளை மூன்றாவது பரிசோதனை நிகழ்த்தப்படவுள்ளது.

## அல்ஜீரிய கடத்தலில் கொல்லப்பட்ட ஜப்பானியர்களின் எண்ணிக்கை 9 ஆகியது

சகாரன் எரிவாயுக் கிட்டங்கியில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மற்றும் கடத்தல் நடவடிக்கையினால் கொல்லப்பட்ட ஜப்பானியர்களின் எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது.

இத்தாக்குதலில் அதிக உயிர்ப்பலியை எதிர்கொண்ட நாடாக ஜப்பானுள்ளது. தற்போதுவரை மேலும் ஒரு ஜப்பானியர் காணாமற் போயுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அல்ஜீரியாவில் திகான்டொரின் பிரதேசத்திலுள்ள எரிவாயுக்குதம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் 69 பேர் மொத்தமாக சாவடைந்துள்ளனர். அதனுள் 39 பேர் வெளிநாட்டவராவர்

## - தென் சீனக் கடல் தீவுகள் எங்களுடையதே - - சீனா ஆவேசம் -

தென் சீனக் கடலில் உள்ள தீவுக் கூட்டங்களின் மீது தனக்கு மட்டுமே மேலாதிக்கம் உள்ளதாக சீனா ஆவேசமாகத் தெரிவித்துள்ளது.

தென் சீனக் கடல் தீவுகளின் உரிமை தொடர்பாக பிலிப்பீன்ஸ் மற்றும் ஏனைய நாடுகளான தாய்வான் ஜப்பான் போன்றவை உரிமைக் குரல் எழுப்பத் தொடங்கியுள்ள இவ்வேளையில், பிலிப்பீன்ஸ் தனதுரிமையை நிலைநாட்ட ஐக்கிய நாடுகளின் உதவியினைப் பெறத் தீர்மானித்துள்ளதாக அறிவித்திருந்தது.

இதனைத் தொடர்ந்தே சீனா தனது ஆக்ரோசமான உரிமைக் குரலை வெளிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் கீழ் கடல் சட்ட ஆயத்தின் உரைகளை ஏற்று நடப்பதாகக் கையெழுத்திட்டுள்ள சீனாவை அவ்வாயத்தின் நியாய சபைக்கு முன் கொண்டுவரப் போவதாக பிலிப்பீன்ஸின் வெளிவிவகார அமைச்சர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் தனது உரையில் தனது நாட்டில் கடல் வரம்புக்குள் உள்ள தீவுகளின் மீது சீனா தேவையற்ற தலையீட்டைக் கொண்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். ஆனால் சட்ட மற்றும் வரலாற்றின் அடிப்படையில் அத்தீவுகள் மீது தமக்கு ஆதிக்கம் இருப்பதாக சீனா குரலெழுப்பியுள்ளது.

## - யெமனின் அறுவரைக் கொலை செய்தது - அமெரிக்க ஆளற்ற விமானம்

அல்குவேதாவுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் ஆறு யெமனியர்களை அமெரிக்க ஆளில்லா விமானக் குண்டு வீச்சின் ஊடாக அமெரிக்கா கொலை செய்துள்ளது.

இத்தாக்குதல் யெமனின் தலைநகரிலிருந்து சிறிது தூரத்தில் நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ் அறுவரில் இருவர் சவூதியைச் சேர்ந்தவர்கள் என்று ஓர் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

யெமனிய பாதுகாப்பு அமைச்சின் பெயர் வெளிவர விரும்பாத அதிகாரியின் குறிப்பின் படி " யெமனில் நிலையான வாழ்வு திரும்ப வேண்டுமாயின் இவ்வாறான பயங்கரவாதிகள் கொல்லப்பட வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் " யெமன் இப்போது அல்குவேதாப் போராளிகளுக்கான சாவிடமாக மாறியுள்ளது. யெமனில் எங்கும் அவர்கள் இராணுவத்தினரால் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர்'' என்றும் தெரிவித்துள்ளார்.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 03

பிரதீபா

1. முகம் பார்க்கும் கண்ணாடி முன் நின்று கொண்ட ஒருவர் தனது உருவத்தை பார்த்து கூறிய பின்வரும் கூற்றுக்களில் மிகச்சரியானது எது?
   1. இக்கண்ணாடியில் காணப்படுபவர் எனது தங்கையின் தாயின் சகோதரி ஆவார்.
   2. இக்கண்ணாடியில் காணப்படுபவர் எனது தம்பியின் தாயின் மகனாவார்.
   3. இக்கண்ணாடியில் காணப்படுபவர் எனது சகோதரனின் அப்பாவின் சகோதரன் ஆவார்.
2. 2003 வது வருடம் எத்தனையாம் நூற்றாண்டு?
   1. 20ம் நூற்றாண்டின் பிற்பகுதி 2. 21ம் நூற்றாண்டின் முற்பகுதி 3. 21ம் நூற்றாண்டின் பிற்பகுதி
3. தாவரங்கள் அழிக்கப்படுவதனால் புவி வெப்பம் ..................
   1. அடைகின்றது 2. அடையும் 3. அடையாது
4. கறுப்பு நிறத்திற்கு எதிர்ப்பக்கம் உள்ள நிறம் யாது?
   1. நீலம் 2. வெள்ளை 3. சிவப்பு
5. ஒருவரின் அடக்கமுடியாத கோபத்தை உணர்த்துவது?
   1. உள்ளங்கை நெல்லிக்கனி போல 2. நீறு பூத்த நெருப்புப் போல 3. இலை மறை காய்போல

**கீழ்வரும் தகவலை வாசித்து விடையளிக்குக.**

நான் நூலகத்தில் புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தபோது வகுப்பாசிரியர் என்னை அழைத்ததாக எனது நண்பன் வந்து கூறினான்.

6. எனது வகுப்பாசிரியர் நண்பனின் வகுப்பாசிரியர் அல்ல. இக்கூற்று
   1. சரி 2. கூறமுடியாது 3. பிழை
7. வகுப்பாசிரியர் என்னை வகுப்பிற்கு வருமாறே அழைத்தார். இக்கூற்று
   1. சரி 2. பிழை 3. கூறமுடியாது
8. இவர் "தேச பிதா" என்று அழைக்கப்படுபவர். 1884 ஒக்டோபர் மாதம் 20ம் திகதி பிறந்தவர். இவர் யார்?
   1. C.W.W.கன்னங்கரா 2. D.S.சேனநாயக்க 3. சித்திலெப்பை
9. மோனாலிசா ஓவியத்தை வரைந்தவர் யார்?
   1. லியனாடோ டாவின்சி 2. சார்ள்ஸ் டாவின் 3. சாள்ஸ் டாவின்சி
10. மஸ்கெலிய ஓயாவில் உற்பத்தியாகி, ஹட்டன் பிரதேசத்தின் ஊடாகச் செல்லும் நீர்வீழ்ச்சி எது?
    1. லக்சபான 2. தியலும 3. துங்ஹிந்த
11. இவர் -"ஸ்ரீபாத" எனும் நூலை வெளியிட்டவர். மக்கள் மாட்டிறைச்சியை உண்பதைத் தவிர்ப்பதற்கு அரும்பாடு பட்டவர். இவரே மருந்து மூலிகைகளைச் சேகரித்து இலவச மருத்துவ சாலையை ஸ்தாபித்தவர். இவர் யார்?
    1. கெப்பட்டிப்பொல திசாவை 2. வண. எஸ் மகிந்த 3. கொங்காலே கொடபண்டா

**கீழ்வரும் தகவலை வாசித்து விடையளிக்குக.**

யது, ரினு, யுதேஸ் ஆகியோர் விரும்பும் நிறங்கள் தரப்பட்டுள்ளன.

| யது | ரினு | யுதேஸ் |
|---|---|---|
| பச்சை | கறுப்பு | சிவப்பு |
| நீலம் | மஞ்சள் | ஊதா |
| வெள்ளை | நீலம் | பச்சை |
| மஞ்சள் | கறுப்பு | சிவப்பு |

12. யுதேசும் யதுவும் விரும்பும் நிறங்கள் எவை?
    1. நீலம், மஞ்சள் 2. சிவப்பு, மஞ்சள் 3. நீலம், சிவப்பு
13. மூவரும் விரும்பும் நிறமேதும் உண்டா?
    1. ஆம் 2. இல்லை 3. கூறமுடியாது
14. ரினு விரும்பாத ஆனால் யது விரும்பும் நிறம் எது?
    1. சிவப்பு 2. பச்சை 3. நீலம்
15. ஒரு கார் 20km செல்வதற்கு 1.5l பெற்றோல் தேவைப்படுகின்றது எனின், 10.5 l பெற்றோலில் பயணம் செய்த தூரம் யாது?
    1. 7km 2. 140km 3. 120km
16. ஒரு வேலையைச் செய்வதற்கு 6 மனிதர்களுக்கு 10 நாட்கள் தேவைப்பட்டது எனின், இதே வேலையை 10 மனிதர்கள் செய்வதற்கு எத்தனை நாட்கள் தேவைப்படும்?
    1. 6 நாட்கள் 2. 10 நாட்கள் 3. 4.5 நாட்கள்
17. ரூபா 22.50 விலையுள்ள இரு கொப்பிகளும் ரூபா 17 விலையுடைய பேனாக்கள் மூன்றினையும் வாங்கி நூறு ரூபாய்த் தாளைக் கொடுக்கும் போது கிடைக்கும் மீதி எவ்வளவு?
    1. ரூபா 96 2. ரூபா 4 3. ரூபா 21

பெயர்: ..........................................................
..........................................................
முகவரி: ..........................................................
..........................................................
..........................................................
பாடசாலை: ..........................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 4ம் குறுக்கு வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தில் கலைச் சொல்லாக்கம்

## 27.12.2009ல் நடந்த தேசிய இலக்கியப் பேரவையின் ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை

சென்ற வாரத் தொடர்ச்சி

இதனை நாம் விளங்கிக்கொள்வதற்கு, கட்டற்ற மென்பொருள் இயக்கத்தின் கோட்பாடுகள் தொடர்பான சில அடிப்படைகளை அறிந்துகொள்வது இன்றியமையாதது.

மென்பொருள் உருவாக்கத்தில் பெரு நிறுவனங்களின் மேலிருந்து கீழான அதிகாரப் படிநிலைகளோடமைந்த சட்டகத்தைக் கட்டற்ற மென்பொருள் இயக்கம் தலைகீழாக்குகிறது. தகர்க்கிறது. மென்பொருளை உருவாக்குபவர்களும் பயன்படுத்துபவர்களும் நேரடியாகவே மென்பொருள் உருவாக்கம் தொடர்பான முடிவுகளை எடுக்கும்படியாக நிலைமை மாற்றமடைகிறது. மென்பொருளுக்குத் தேவையான கலைச்சொற்களை உருவாக்கும் பணியும் அவ்வாறே அமைகிறது.

மையப்படுத்தப்பட்ட அதிகார அமைப்பு ஒன்றின் அறிவுறுத்தலின் பேரில் அறிஞர் குழு ஒன்று தமக்குள் கூடி கலைச்சொற்கள் இவைதாம் என முடிவெடுத்து அதனைப் பயன்பாட்டாளர்களிடம் இறுதிப்படுத்தப்பட்ட சொற்களாக வழங்கும் நிலைக்கு மாற்றாக, பயன்பாட்டாளர்களும், மென்பொருளை உருவாக்குபவர்களும் இணையத்தில் தமக்குள் தொடர்பாடி குறித்த சூழ்நிலைக்குத் தேவையான சொற்களைத் தாமே உருவாக்கிப் புழக்கத்துக்குவிட்டு அதற்கான எதிர்வினைகள் மாற்றுக்கருத்துக்களை உள்வாங்கித் தம்மால் உருவாக்கப்பட்ட சொற்களைத் திருத்தியும் வளர்த்தும் செல்லும் புதிய போக்கும் உருவாகி வளர்ந்தது.

துறைச்சொற்களை அறிஞர் குழாம்கள் உருவாக்கி வழங்கும் நிலைக்கு மாற்றாகத் தொழிற்களத்தில் சாதாரணமக்களால் அவர்களுக்கான கலைசொற்கள் தேவைக்கேற்றபடி உருவாக்கப்பட்ட நிலைக்கு இதனை மிகச்சிறிய அளவிலாயினும் ஒப்பிடலாம்.

முறையான ஒழுங்குபடுத்தல்களுடன் கலைச்சொற்கள் ஆக்கப்பட்டு அறிஞர் குழூக்களால் அகரமுதலிகள் வெளியிடப்படும் நிலையும் தொடர்ந்தது, கூடவே, ஏதாவதொரு மடலாடற்குழுவில் " எனது பெயர் இது, நான் இந்த மென்பொருளைத் தமிழாக்கியுள்ளேன். பயன்படுத்திப்பார்த்து கருத்துக்களைச் சொல்லுங்கள்" என்று அறிவிக்கும் மின்னஞ்சல்களும் வரவாரம்பித்தன.

இருபோக்குகளுமே நல்ல விளைச்சலைத் தமிழ்ச் சூழலுக்குக்கொடுத்தன.

லினக்ஸ் இயங்குதளத்திற்கான பணிச்சூழல் தமிழாக்கப்பட்டு முதல் தமிழ்ப்பணிச்சூழலாக வெளிவருகிறது. October 22 ம் நாள் 2000ம் ஆண்டு வெளிவந்த KDE 2.0 பதிப்பு இவ்வாறு தமிழ் இடைமுகப்பினை முதன்முறையாக உள்ளடக்கியிருந்தது.

இத்தமிழாக்கம் முழுமையும் கட்டற்ற மென்பொருள் கோட்பாடுகளின் அடிப்படையில் சாதாரணப் பயனாளர்களும் மென்பொருளாளர்களும் தமிழறிந்தவர்களும் இணையத்தில் கூடி உருவாக்கிய சொற்களையே கொண்டிருந்தன.

இந்த வேலைகளைப் பொறுப்பெடுத்து சீராகச் செய்திருந்தவர்கள் Siva, Gomathi, Dinesh, Venkat, Vasee எனும் பெயர்களுடையவர்கள் என்று நான் தேடிய மூலங்களில் காணக்கிடைக்கினறன.

இவர்கள் உருவாக்கிய சொற்கள் இணையத்தில் தொகுப்பாகக்கிடைத்தன.

முதல் தமிழ் இயங்குதளமாக வெளிவந்த மான்ட்ரேக் லினக்ஸ் இயங்குதளமும் இவ்வாறாக சாதாரண தமிழ்ப்பயனாளர்கள், தொழிநுட்பவியலாளர்களது உழைப்பிலேயே உருவாக்கப்பட்டது.

11 நவம்பர் 2000. இல் வெங்கட்ரமணன் இந்தப்போக்கின் குறுக்குவெட்டுமுகத்தினை பின்வருமாறு எழுதி எமக்குக்காட்டுகிறார்.

- இதுபோன்ற தன்னார்வ திட்டங்கள் பெரிதும் கூட்டுமுயற்சியாகவே உருவாகின்றன. பலர்பங்காற்றியே இவையெல்லாம் நடைமுறைக்கு வந்துள்ளன. இதில் பங்காற்றியவர்கள் அனைவரையும் திட்டவட்டமாகப் பட்டியலிடுவது இயலாதது. இந்த இடைமுகம் தமிழ் தகுதர எழுத்துக்களில் அமைந்துள்ளது, இந்தத் தகுதரம் உருவாகப் பலர் இணைந்து சேவை செய்திருக்கிறார்கள்.

இந்தத் தகுதரத்திற்குத் தமிழ் எழுத்துக்களையும் அகரம் கோப்புத் தொகுப்புச் செயலியையும் ஆரம்பக் காலங்களில் சின்னச்சாமி நாகராஜன் தயாரித்தளித்தார்.

பின்னர் வசீகரன் தமிழ் விசைப்பலகை மேலாண்மை செயலியை உருவாக்கினார், இவரே அகரம் தொகுப்பியின் பயன்களை நீட்டித்து அதை சக்திவாய்ந்த அறிவியல் ஆவணங்களையும் தயாரிக்க ஏதுவாக்கினார் (akaramTeX) இந்த கட்டத்தில் சிவக்குமார் எனும் நண்பர் KDE இடைமுகத்திற்கான தமிழ் வேலைகளைத் துவக்கினார். அவருடன் நாங்கள் சிலரும் இணைந்தோம். எனினும் சிவக்குமார், கோமதி இருவரும் இடைமுகத் தமிழாக்கத்தை விரைவுபடுத்தினார்கள். இன்றைக்கு வெளியாகி சாதனையாகப் பேசப்படும் தமிழ் லினக்ஸ் இடைமுகத்தில் இவருடைய பங்கு அளவிட முடியாதது. இது தொடர்ந்து தினேஃ நடராஜா க்னோம் இடைமுகத்தையும் தமிழாக்கம் செய்வதில் முன்னின்று நடத்திவருகின்றார். சிவராஜ் வரைவியல் இடைமுகம் இல்லாத எழுத்து அடிப்படையிலான முனையங்களிலும் தமிழ் படிக்க ஏதுவாக்க அதி சக்தி வாய்ந்த செயலியை (console utilities) வடித்திருக்கிறார். இவர் க்னோம் இடைமுகத்திற்காக உருவாகிவரும் எழுத்துரு வரைவாக்க இயந்திரமான பாங்கோ (pango)-வின் செயல்களை தமிழுக்கு நீட்டித்திருக்கிறார்.

இன்னும், பலர் (பெயர் குறிப்பிடப்படாத இவர்களின் பங்கு எந்த வகையிலும் குறைந்ததல்ல - இந்தச் சக்கரத்தின் ஒவ்வொரு ஆரமும் சக்கரம் சுழல இன்றியமையாதது என்பதை நண்பர்கள் அனைவரும் நன்றாக உணர்வார்கள்).

சக்கரம் தொடர்ந்து சுழன்றுகொண்டிருக்கிறது, விரைவில் பல சக்திவாய்ந்த செயலிகளும் தமிழ் இடைமுகம் பெறவிருக்கின்றன.-

**மயூரன்**

# தலைப்பிட முடியாக் கவிதைகள் இரண்டு

**எம். போல்**

வீணை
எனது காலமாய் எப்போதும் என்னுடன்
பயணம் கொள்ளவில்லை.
எனினும் அதனோடு நான் வாழ்ந்தேன்.
வசீகரம் மிக்க ஒலியில் வீணை தவழ்ந்த
போதும்
நான் - என்னை ஓர் வயோதிகனாய்
உணராது இருந்த

- போதும்
இருள் பற்றிய அச்சம் எனது மண்டையை
சூடாக்கா திருந்த
போதும்
எல்லோராலும் எழுதப்பட்ட கவிதைகளில் -
அவற்றில் வீசிய யுத்தத்தின் கொடிய
வீச்சத்தை
என்னால் உணரமுயாதிருந்தபோதும் -
ஓ! கடவுளே
வீணை - எனது காலமாய்
எப்போதுமே என்னுடன் பயணங்கொள்ளாத
போதும்
அதன் ஒலியில் நான் வாழ்ந்தேன்.

நேற்று
நானொரு வயோதிகனாய் உணர்ந்தேன்

இருள் பற்றிய அச்சத்தால் நரம்புகள்
நடுங்குகின்றன.
போர்மிக்க நாட்களில் நான் எழுதிய
கவிதைகளில்
எலும்புகள் மணக்கின்றன.
மனித ஒலிகளும் நரம்புகளும் கூட
சீ.... கடவுளே
நான் தோற்று விட்டேன்
வீணையின் கடைசி ஒலியும் தேய்ந்து
விட்டது

காற்றில்
தேய்ந்தொழிந்த நிலவைத்தவிர
எதுவுமேயிருக்கவில்லை
அதில்
பிறகு ஒவ்வொரு நாளும்
சூரியனால் வடிந்ததெனினும் அதில்
இருண்டு நீண்டிருக்கிறது ஒரு கவிதை

கவிதை - 02

அழகிய இரவுபற்றிய
எனது கவிதைகளில்
எப்போதுமே மிருகங்கள்
காவலிருக்கின்றன.
மிருகங்கள் பற்றிய
அச்சத்தால் அழுகிச்
சிதைந்தது நிலவு

நேற்றைய கவிதைகளையும்
இன்றைய வாழ்க்கையையும்
நான் இழந்தேன்.

எனது கவிதைகளின்
காதலையோ
மனச் சுவர்களில்
அவை புணரும் காட்சிகளையோ
அவற்றின்
அந்தரங்களையோ
வெறியோடு தின்னுகின்றன
மிருகங்கள்.

துரத்தியடிக்கப்பட்ட ஒரு கவிஞனின்
எல்லையற்ற விதி பற்றியும்
மிருகங்களுடனான
அவனது வாழ்வுபற்றியும்
இன்றைய கவிதைகளை காற்றுத்தானும்
எழுதவில்லை.

எனது முழுமையையும் மிருகங்கள்
உறிஞ்சிய
கவிதைகளின்
பிரேதநீதி இழுத்துச் சென்று விட்டது.

நூறு தடவைகளுக்கு மேல் நிகழ்ந்தது
எனது இறப்பு
நான் இறந்தேன், மீண்டும் மீண்டும்
நூறு தடவைகளுக்கு மேல்
மிருகங்கள் உடலைத் தின்னுகின்றன
கவிதைகளற்ற உடலை
உயிரற்ற உடலை.

நன்றி: சரிநிகர் 206

# திருவள்ளுவர்

திருவள்ளுவரைப் பற்றி வாழ்க்கைக் குறிப்பு எழுத சான்றுகள் எதுவுமே இல்லை. அவர் மதுரையில் பிறந்தார் என்று சிலரும், சென்னையில் உள்ள மயிலாப்பூரில் பிறந்தார் என்று சிலரும் சொல்கின்றனர். அவர் ஆதி - பகவன் என்ற பெற்றோருக்குப் பிறந்ததாகவும் சிலர் பொய் சொல்கின்றனர். இவை எதுவுமே உண்மை இல்லை. அவர் பிறந்த காலம் எது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

அவர் கி.மு.31 ஆம் ஆண்டு பிறந்திருக்கிறார். திருவள்ளுவர் பிறந்து இந்த வருடத்துடன் 2044 ஆண்டுகள் ஆகின்றன. தமிழ் மக்கள் அவர் பிறந்த ஆண்டை ஆதாரமாகக் கொண்டு தி.மு., தி.பி. என்று காலத்தைப் பிரித்து பயன்படுத்துகிறார்கள். வள்ளுவர் ஒரு கிறித்துவர், அவர் ஒரு சமண மதத்தவர், அவர் பவுத்தர் என்றெல்லாம் கூட சிலர் நேரத்தை வீணாக்கி ஆய்வு செய்கிறார்கள். அவர் காலத்தில் கிறித்துவ மதமே வடிவம் பெற்ற ஒன்றாக இல்லை என்பதே வரலாற்று உண்மை. அவரின் குறட்பாக்களில் இருக்கின்ற கருத்துக்களை வைத்துக் கொண்டு எல்லோருமே சொந்தம் கொண்டாடு கிறார்கள்.

பொன்னும் பொருளும் நிறைந்த மூட்டை ஒன்று கேட்பாரற்று இருந்தால், எல்லோருமே அதை உரிமை கொண்டாட நினைப்பார்கள் இல்லையா? அது போலத்தான் இது. வள்ளுவரின் தோற்றமும் கூட கற்பனையாக வரையப்பட்டதுதான். அவருக்கு வாசுகி என்ற மனைவி இருந்ததாகச் சொல்வதற்கும் சான்றுகளே இல்லை.

மதுரையிலே தமிழ் அரசர்கள் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்தனர். மூன்று சங்கங்கள் இருந்தன. கடைசியாக இருந்த சங்கம் கி.மு. 300க்கும் கி.பி. 250க்கும் இடைப்பட்டது. அப்போதுதான் திருக்குறள், புலவர்கள் நடுவிலே பாடி அறிமுகம் செய்யப்பட்டது. மதுரையை "ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்" என்ற பாண்டிய மன்னன் அன்று ஆட்சி புரிந்துள்ளான்.

கிடைக்கின்ற செய்திகளையெல்லாம் இணைத்துப் பார்க்கின்றபோது, வள்ளுவர் என்ற மனிதர் இருந்தார் என்பதும், அவர் எழுதிய நூலே திருக்குறள் என்பதும் உறுதியாகிறது. ஆனால் அவரைப் பற்றிய அத்தனை செய்திகளும் அழிக்கப்பட்டுள்ளன. வள்ளுவர் காலத்துக்கு முன்பு இருந்த புலவர்களைப் பற்றியெல்லாம் சான்றுகள் இருக்கிறபோது, இவரைப்பற்றி எதுவும் இல்லாமல் இருப்பது வியப்புதான்.

அவர் கற்பனையான கடவுள்கள் எவரையும் ஏற்கவில்லை. சாதி பிரிவினையையும், விலங்குகளை பலியிட்டு நடத்தும் வேள்விகளையும் எதிர்த்தவர். பொய் பேசாமல், களவு செய்யாமல், நாகரிகமுடன் வாழ எண்ணினார். அனைவரையும் கற்கும்படி வலியுறுத்தினார். இயற்கையை நேசித்தார். குடும்ப வாழ்க்கையை

## உண்மையின் தரிசனம்

முறையாகவும் பண்புடனும் பயன் படுத்தும்படி கூறினார். ஆட்சி செய்கிறவர்கள் மனித நேயத்துடன் இருக்க வேண்டும் என்று விரும்பினார். இக்கருத்துக்களே அவர் எழுதிய 1330 குறட்பாக்களில் உள்ளன.

இவர் சிந்தனைகள் உலக மக்கள் அனைவருக்குமே உதவும் வகையில் இருக்கின்றன. எனவே தான் திருக்குறள் உலகப் பொது மறை எனப்படுகிறது.

திருவள்ளுவர், வள்ளுவன் என்ற பெயர்களில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே சில உட்பிரிவுகள் இருக்கின்றன. இவர் தொன்மையான தமிழ்க் குடியைச் சேர்ந்தவர் என்ற கருத்து அன்றைய புலவர்களுக்கும் இருந்துள்ளது என்பதை காலம் காலமாய் வழங்கி வரும் சில கதைகளும், கி.பி.1050இல் எழுதப்பட்ட 'திருவள்ளுவமாலை' என்ற நூலில் உள்ள சில பாடல்களும் தெரிவிக்கின்றன. அக்கதைகளில் ஒன்று இதுதான். ஆனால் வள்ளுவருக்கும் பிற புலவர்களுக்கும் இடையே ஏதோ ஒரு வகையான மோதல் [illegible] மட்டும் புரிந்து [illegible]

சாதி, மதக் கருத்துக்களை எதிர்த்து பல குறட்பாக்களை எழுதியுள்ளார் திருவள்ளுவர். அதை சுட்டிக்காட்டும் வகையிலே 'திருவள்ளுவ மாலை'யில் சில பாடல்கள் உள்ளன. அதில் ஒரு பாடல்:

"ஆற்றல் அழியுமென்று அந்தணர்கள் நான்மறையைப் போற்றி உரைத்து ஏட்டின் புறத்தில் எழுதார் - ஏட்டை எழுதி வல்லுநரும் அல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச் சொல்லிடினும் ஆற்றல் சோர்வின்று"

சாதி, மத சூழ்ச்சிகளை யாரும் அறிந்து தெளிவு பெறக்கூடாது என்று ரிக், யசூர், சாம, அதர்வணம் என்கிற நூல்களை ஆரியர்கள் மறைத்து விட்டார்கள். ஆனால் வள்ளுவரோ அந்த நூல்களுக்கு எதிராக மூன்று வகையான வாழ்வின் நெறிகளைச் சொல்லும் திருக்குறளை எழுதினார் என்பதுதான் இப்பாடலின் பொருள். இக்கருத்துக்களையும், திருக்குறளையும் படித்து புரிந்து கொள்ளும்போது, திருவள்ளுவர் சமூக சீர்த்திருத்த அறிஞராக மனதில் அழுத்தமாகப் பதிந்து விடுவார்.உலக மக்களின் முன் தமிழர்கள் பெருமிதமாக நெஞ்சம் நிமிர நிற்கும்படி செய்த மாமனிதர் திருவள்ளுவர். அறிவியல் கண்டுபிடிப்புகளாலோ, அரசாண்டதாலோ அவர் அப்பெருமையை உருவாக்கித் தரவில்லை. தன் அறிவாலும், சிந்தனையாலும் உருவாக்கித் தந்திருக்கிறார். அவர் எழுதிய திருக்குறள் அப்பெருமையை தமிழர்களுக்கு வழங்கியிருக்கிறது.



நன்றி :

சங்கரியின் பதிவுகள்

வலைப்பூ: தூய தமிழ் சொற் கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளைகளைத் திறக்கும். . .

கடந்த சனிக்கிழமை காலை திருக்கோணமலையில் உள்ள கட்சித் தலைவர் திரு. சம்பந்தரின் காரியாலயத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போதே இவ்வாறு பதின்மூன்று பிரதேசங்களிலும் கட்சிக் கிளைக் காரியாலயங்களை திறப்பது என்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இத் தீர்மானத்தை நிறைவேற்றிக் கருத்துத் தெரிவித்த திரு. சம்பந்தன் அவர்கள் “இவ்வாறு கிளைகளை அமைப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப் படுத்துமே அன்றி பலவீனப் படுத்தாது” என்று தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில் “தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியாகப் பதியப்படும் வேளை அனைத்துத் தமிழரசுக் கட்சி அங்கத்தவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்தவர்களாக இணைந்து கொள்வார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேசச் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சியாகும். நாம் அனைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவே இருக்கின்றோம். தமிழரசுக் கட்சியின் கிளைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்தும் ஒரு செயலாக யாரும் கருதிவிடக் கூடாது” என்றார்.

கடந்த பல காலமாக திருமலை மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியோ அன்றேல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளோ பிரதேச மட்டக் காரியாலயங்களையோ கிளைகளையோ அமைக்க முயற்சிக் கவில்லை.

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் கிளைச் செயலகங்களை அமைப்பதற்காக கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள் 9 பேரைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காலனித்துவக் கால. .

காலனித்துவக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட பீரங்கியின் பிரதான குழாயைக் கடற் படுக்கையிலிருந்து கண்டு பிடித்துள்ளனர்.

திருமலையின் தென் கிழக்குக் கடற்படுக்கையில் இப் பீரங்கிக் குழாய் கிடப்பதை அவதானித்துள்ள சுழியோடிகள் அதனை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். சோபர் தீவுகளுக்கு அருகில் இருந்து மீட்கப்பட்ட இப் பீரங்கிக் குழாய் சரியாக எவருடைய காலனித்துவ ஆட்சியின் போது நிறுவப்பட்டது என்னும் தகவல் தற்போதுவரை வெளியாகவில்லை.

மீட்கப்பட்ட பீரங்கிக் குழாய் தற்போது திருகோணமலையின் டச்சுக் கால கடலோட்ட தொல்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.





## மாகாணசபையின் . . .

கிழக்கு மாகாண சபையின் கடந்தவார அமர்வொன்றில் தனிநபர் பிரேரணையொன்றின் விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தனது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றிய போது “அமைச்சரவையிலும் மாகாண சபையிலும் எடுக்கப்படும் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு முடியாத அமைச்சர்களாகவே நாங்கள் இருக்கின்றோம் என்பதை மிகவும் கவலையோடு நான் இங்கு தெரிவித்துக் கொள்கின்றேன். மாகாண சபையிலும், அமைச்சரவையிலும் எடுக்கப்படும் தீர்மானங்களை கிழக்கு மாகாண ஆளுநர் கணக்கில் எடுக்காமல் உதாசீனம் செய்து தூக்கி வீசுகின்றார்.

எங்கள் அமைச்சுக்களின் சார்பில் இந்த வருடத்துக்கான நாட்குறிப்பு புத்தகங்களை (டயரி) வெளியிடுவதில் கூட ஆளுநரின் தலையீடு காணப்படுகின்றது. இந்த வருடத்துக்கான நாட்குறிப்பு புத்தகங்களை எமது அமைச்சினூடாக வெளியிடுவதற்கு நாம் முயற்சித்த போது வேண்டாம் என்று ஆளுநர் தடுத்துவிட்டார்.

இதுதான் கிழக்கு மாகாணசபையின் இன்றைய நிலையாகும். மாகாண சபை உறுப்பினர்களுக்கு காவல்துறைப் பாதுகாப்பினை வழங்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தோம். இவை தொடர்பில் சபையின் தலைவி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்” என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆஸ்திரேலியப் . . .

திருமலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

18.01.2013ல் சில்வெஸ்டர் தங்குமிட விடுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவர்கள் தற்போது வரை மேலதிக விசாரணைகளுக்காக நீதிமன்ற அனுமதியுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

திருமலையின் காவல் துறையினருக்குக் கிடைத்த அனாமேதயத் தொலைபேசி அழைப்பினை அடுத்து மேற்படி கைது நிகழ்ந்துள்ளது.

கிளிநொச்சியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணமாகியிருந்த இவர்கள் பின்னர் கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுனாமி எச்சரிக்கைப். . .

சுனாமி எச்சரிக்கைப் பயிற்சி நெறியினை கிண்ணியா பிரதேசத்தின் மஹரூப் நகர் கிராம சேவையாளர் பிரிவின் கீழுள்ள அண்ணல் நகர் கிராம மக்கள் பெற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கான பயிற்சிகளின் போது சுனாமித் தாக்கம் நிகழ்ந்தால் பாதுகாப்பிற்காக தஞ்சமடைய வேண்டிய இடமாக அல் ஹிறா மகா வித்தியாலயம் தெரிவு செய்யப் பட்டிருந்தது.

## கிழக்கிற்கு 3 இன்சினேற்றர்ஸ் இயந்திரங்கள் ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கம் நன்கொடை

கிழக்கு மாகாணச் சுகாதாரத் திணைக்களத்திற்கு 3 இன்சினேற்றர்ஸ் எந்திரங்களை ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

இவை ஒவ்வொன்றும் ரூபா 8 இலட்சம் பெறுமதியானவை. திருக்கோணமலை மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப் பட்டுள்ள இந்த நன்கொடைக்கு ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கம் நிதியுதவியை வழங்கியிருந்தது.

கழிவகற்றல் தொழிற்பாட்டினை மேற்கொள்வதற்காகவே இந்த எந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நீராவித் தொழில் நுட்பத்தினால் இயங்கவல்ல இந்த இயந்திரங்கள் வைத்தியசாலைகளில் இருந்து அப்புறப்படுத்தப்படும் மருந்துப் பொருட் கழிவுகளை சூழலுக்கு ஆபத்தற்ற வகையில் அழிக்கக் கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னரான காலப்பகுதிகளில் மின்சார வலுவில் இயங்கவல்ல கழிவகற்றல் இயந்திரங்களே பாவனையிலிருந்தன. எனினும் அவற்றை நிறுவுவதற்குப் போதுமான மின்சாரச் செலவை ஏற்றுக் கொள்ளத்தக்க நிலை அக்காலப் பகுதியில் கிழக்கு மாகாண சபைக்கிருக்கவில்லை. இதனால் கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள வைத்தியசாலைகளின் கழிவுகள் காடுகளிலும் மக்கள் நடமாட்டமற்ற பகுதிகளிலும் கொட்டப்பட்டு வந்துள்ளன.

தற்போது வழங்கப்பட்டுள்ள மூன்று எந்திரங்களும் மாவட்ட வைத்திய சாலைகளுக்கு பிரித்து வழங்கப் படவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## புல்மோட்டை ஹாபிழ் அக்கடமியின் பாராட்டு விழா

புல்மோட்டை பிரதேசத்தில் உள்ள “ஹாபிழ் அக்கடமி” மேலதிக வகுப்பு கல்விச்சாலையில் படித்து பயிற்சி பெற்ற மாணவர்களை பாராட்டும் வைபவம் ஹாபிழ் அக்கடமி அரங்கில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் 2011-12 தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து மாவட்ட மட்ட புள்ளிகளைப் பெற்றவர்களையும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்குமான 60 பேர் வரையிலானோர் பாராட்டை பெற்றனர்.

இவ் பாராட்டு விழாவில் புல்மோட்டை அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி Dr.M.I.சம்மூன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். மேலும் அதிபர்கள் ஆசிரியர்கள் கிராம சேவையாளர் சமுர்த்தி உத்தியோகஸ்தர் சுகாதார பரிசோதகர்கள் மருத்துவ தாதியர்கள் பிரதேச பள்ளிவாசல் தலைவர் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இவ்விழாவில் ஓய்வு பெற்ற பிரதி அதிபரும், அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய எஸ்.எல். முகைதீன் பாவா சிறப்புரையாற்றுகையில் ஆரம்ப, இடைநிலை மற்றும் மேற்கல்வி நடவடிக்கைகளுக்கு எமது ஹாபிழ் அக்கடமி பெரிதொரு பங்களிப்பை வழங்கி வருகின்றது என கூறினார். மேலும் அவர் கூறுகையில் கடந்த காலங்களில் புல்மோட்டையிலிருந்து மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் சிறந்த சித்தியைப்பெற்ற மாணவர்களும் இக்கல்விச்சாலையில் தமது மேலதிக கல்வியை மேற்கொண்டனர் என அவர்களின் நேர்காணலின் போது அவர்கள் தெரிவித்தனர் என அவர் தெரிவித்தார்

அவரைத்தொடர்ந்து ஹாபிழ் அக்கடமியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.பாசித் தனது வருடாந்த செயற்பாடுகள் பற்றிய விசேட உரையில் கடந்த கால எதிர் கால கல்வி அபிவிருத்தி தொடர்பான அமுலாக்கல் செயற்றிட்டங்கள் பற்றிய விளக்கம் அளித்தார்.

“வீட்டுக்கு ஒரு பட்டதாரியை உருவாக்குவோம்” என்னும் அம்சத்தில் கடந்த வருடம் இக்கல்விச் சாலையிலேயே முற்றுமுழுதாக கல்வி பயின்ற மூவர் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட வெளிவாரி பட்டப்பரீட்சையில் சித்திபெற்றுள்ளனர் என்பது எமக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும் எனக்கூறினார்.

அதனைதொடர்ந்து ஹாபிழ் அக்கடமியில் கல்விகற்கும் தரம் 10,11 மாணவர்களுக்குரிய விஞ்ஞானப் பாட கற்பித்தல் தொடர்பான உபகரணங்கள் மற்றும் பரிசோதனைகளுக்கான பொருட்கள் அடங்கிய “விஞ்ஞான பரிசோதனை அறையை” பிரதம அதிதியால் திறந்து வைக்கப்பட்டது.

(அனஸ்)

## விஸ்வரூபம் வெளியிடத் தடை

கமல்ஹாசன் இயக்கி தயாரித்து நடித்துள்ள விஸ்வரூபம் திரைப் படத்தினை இலங்கையில் திரையிட தடை விதிக்கக்கோரி தௌஹீத் ஜமாஅத் அமைப்பினர் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெற்றுள்ளதாக தௌஹீத் ஜமாஅத்தின் துணைச் செயலாளர் ரஸ்மின் வீரகேசரி இணையத்தளத்திற்கு தெரிவித்தார்.

நேற்று இரவு தமிழக அரசினால் 15 நாட்களுக்கு தமிழகத்தில் வெளியிட தடை விதிக்கப்பட்டிருந்த இப்படத்திற்கு இலங்கையிலும் தற்காலிகத் தடைவிதிக்க ப்பட்டுள்ளது.

திரைப்படம் இலங்கை திரைப்பட தணிக்கை குழுவினரால் இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள ப்பட்டது. இதில் முஸ்லிம் தலைவர்களின் ஆட்சேபனைகள் இல்லாதவிடத்தில் மாத்திரமே இப்படத்தினை திரையிட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் இலங்கை முஸ்லிம் தலைவர்களிடமிருந்து ஆட்சேபனைகள் வெளியானதை யடுத்தே இத்தற்காலிக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## முயற்சித்துப் பாருங்கள்


ஒரு அரசனுக்கு ஏழு மகள்கள் இருந்தனர் அவனிடம் 49 முத்துக்கள் இருந்தன அதில் முதல் முத்தின் மதிப்பு ஒரு பொற்காசுகள் , இரண்டாவது முத்தின் விலை இரண்டு பொற்காசுகள் , மூன்றாவது முத்தின் மதிப்பு மூன்று பொற்காசுகள் நான்காவது முத்தின் மதிப்பு நான்கு பொற்காசுகள் இப்படியாக 49 வது முத்தின் மதிப்பு 49 பொற்காசுகள் . அரசன் தனது 49 முத்துக்களையும் தனது ஏழு மகள்களுக்கும் ஏழு ஏழு முத்துக்களாக பிரித்து தர வேண்டும் ஆனால் முத்துக்களின் மதிப்பு சமமாக இருக்க வேண்டும் . நண்பர்களே உங்களால் 49 பொற்காசுகளின் மதிப்பு சமமாக பிரிக்க முடியுமா ?

குட்டிக்கதை

## அறிவே துணை

ஓர் ஊரில் பெண் ஒருத்தி இருந்தாள். அவளுக்கு இரண்டு குழந்தைகள் இருந்தன. அவள் கணவன் வணிகத்திற்காக வெளியூர் சென்றிருந்தான்.

பல நாட்களுக்குப் பிறகு அவனிடமிருந்து கடிதம் வந்தது. நீயும் குழந்தைகளும் இங்கு வந்து சேருங்கள். நாம் வளமாக வாழலாம், என்று அதில் எழுதியிருந்தது. தன் குழந்தைகளுடன் மாட்டு வண்டியில் பயணித்தாள். அடர்ந்த காட்டு வழியாக வண்டி சென்று கொண்டிருந்தது. ஆபத்து வரப் போவதை மாடுகள் உணர்ந்தன. கயிற்றை அறுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தன. ஐயோ! நடுக் காட்டில் குழந்தைகளுடன் சிக்கிக் கொண்டேனே! இங்கே புலி பலரை அடித்துக் கொன்றுள்ளதே என்றெண்ணி அருகிலிருந்த மரத்தின் கிளையில் குழந்தைகளுடன் அமர்ந்தாள் அவள். சிறிது தூரத்தில் பயங்கரமான புலி ஒன்று வந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்த அவள் அதனிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்று சிந்தித்தாள். நல்ல வழி ஒன்று அவளுக்குத் தோன்றியது. இரண்டு குழந்தைகளின் தொடையிலும் அழுத்திக் கிள்ளினாள். இருவருடம் காடே அலறும் படி அழத் தொடங்கினார்கள். குழந்தைகளே! அழாதீர்கள், நான் என்ன செய்வேன். இப்படி நீங்கள் அடம் பிடிப்பது சிறிதும் நல்லது அல்ல. நேற்றுத்தான் நீங்கள் உண்பதற்கு ஆளுக்கொரு புலி பிடித்துக் கொடுத்தேன். இன்றும் அதே போல ஆளுக்கொரு புலி வேண்டும் என்கிறீர்களே. இந்தக் காட்டில் புலியை நான் எங்கே தேடுவேன்? எப்படியும் இன்று மாலைக்குள் நீங்கள் சாப்பிட ஆளுக்கொரு புலி தருகிறேன். அதுவரை பொறுமையாக இருங்கள், என்று உரத்த குரலில் சொன்னாள். இதைக் கேட்ட புலி நடுங்கியது, நல்ல வேளை! அருகில் செல்லாமல் இருந்தேன். இந்நேரம் நம்மைப் பிடித்துக் கொன்றிருப்பாள், இனி இங்கே இருப்பது நல்லதல்ல, எங்காவது ஓடிவிடுவோம், என்று நினைத்தது அது. ஒரே பாய்ச்சலாக அங்கிருந்து ஓட்டம் பிடித்தது அது. தன் திட்டம் வெற்றி பெற்றதை எண்ணி மகிழ்ந்தாள் அவள். பயந்து ஓடும் புலியை வழியில் சந்தித்தது நரி. இப்படி அஞ்சி ஓடுகிறீர்கள்? உங்களைவிட வலிமை வாய்ந்தது சிங்கம் தான். நம் காட்டில் சிங்கம் ஏதும் இல்லை. என்ன நடந்தது? சொல்லுங்கள், என்று கேட்டது அது. நரியே! நம் காட்டுக்கு ஒரு அரக்கி வந்துள்ளாள். இரண்டு குழந்தைகள் அவளிடம் உள்ளன. அந்தக் குழந்தைகள் உண்ண நாள்தோறும் ஆளுக்கொரு புலியைத் தருகிறாளாம். இப்படி அவளே சொல்வதை என் காதால் கேட்டேன். அதனால் தான் உயிருக்குப் பயந்து ஓட்டம் பிடித்தேன், என்றது புலி. இதைக் கேட்ட நரியால் சிரிப்பை அடக்க முடியவில்லை. புலியாரே! கேவலம் ஒரு பெண்ணிற்குப் பயந்தா ஓடுகிறீர்? அவள் உங்களை ஏமாற்றி இருக்கிறாள். எங்காவது மனிதக் குழந்தைகள் புலியைத் தின்னுமா? வாருங்கள். நாம் அங்கே செல்வோம். அவளையும் குழந்தைகளையும் கொன்று தின்போம், என்றது அது. நான் அங்கு வர மாட்டேன், என்று உறுதியுடன் சொன்னது புலி. அவள் சாதாரண பெண்தான். உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். அதற்காக உங்கள் வாலையும் என் வாலையும் சேர்த்து முடிச்சுப் போடுவோம். பிறகு இருவரும் அங்கே சென்று பார்ப்போம். உங்களுக்கு எந்த ஆபத்தும் வராது. நம் இருவர் பசியும் தீர்ந்து விடும், என்றது நரி. தயக்கத்துடன் ஒப்புக் கொண்டது புலி. இருவர் வாலும் சேர்த்து இறுகக் கட்டப்பட்டன. நரி முன்னால் நடந்தது. புலி தயங்கித் தயங்கிப் பின்னால் வந்தது. மரத்தில் இருந்த அவள் நரியும் புலியும் வருவதைப் பார்த்தாள். இரண்டின் வாலும் ஒன்றாகக் கட்டப்பட்டு இருந்தது. அவளின் கண்களுக்குத் தெரிந்தது. என்ன நடந்திருக்கும் என்பதை உணர்ந்தாள் அவள். கோபமான குரலில், நரியே! நான் உன்னிடம் என்ன சொன்னேன்? என் குழந்தைகள் பசியால் அழுகின்றன. ஆளுக்கொரு புலி வேண்டும் என்றேன். இரண்டு புலிகளை இழுத்து வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றாய். இப்பொழுது ஒரே ஒரு புலியுடன் வருகிறாள் எங்களை ஏமாற்றவா நினைக்கிறாய்? புலியுடன் உன்னையும் கொன்று தின்கிறேன், என்று கத்தினாள். இதை கேட்ட புலி நடுங்கியது, நம்மை ஏமாற்றித் தன் வாலோடு கட்டி இழுத்து வந்திருக்கிறதே. ஓட்டம் பிடிப்பது தான் ஒரே வழி, என்று நினைத்தது அது. அவ்வளவுதான். வாலில் கட்டப்பட்டு இருந்த நரியை இழுத்துக் கொண்டு ஓடத் தொடங்கியது. வாலில் கட்டப்பட்டிருந்த நரி பாறை, மரம், முள்செடி போன்றவற்றில் மோதியது. வழியில் நரியின் வால் அறுந்து மயக்கம் அடைந்தது . புலி எங்கோ ஓடி மறைந்தது. பிறகு அந்தப் பெண் தன் குழந்தைகளுடன் பாதுகாப்பாகக் கணவனின் ஊரை அடைந்தாள்.




## உணவுப் பொருட்களைக் கொண்டு நோய்களைத் தீர்க்கும் எளிய முறைகள்?

• இருமல், இளைப்பு, நீரிழிவு போன்ற பிரச்சனைகட்கு பாகற்காயை அடிக்கடி உணவில் சேர்ப்பதன் மூலம் நிவாரணம் கிடைக்கும்.

• சிறு காயங்கள் ஏற்பட்ட இடங்களில் தேன் சிறிதளவு பூசிவர காயங்கள் விரைவில் குணமாவதுடன் காயத்தின் வடுவும் நீங்கிவிடும்.

• பீற்றூட் கரட் போன்றவற்றைச் சுத்தப்படுத்திக் கழுவிப் பச்சையாகச் சாப்பிட்டு வந்தால், உடலுக்கு வேண்டிய இரும்புச்சத்துக் கிடைப்பதுடன் கண்பார்வை சீராகும். அத்துடன் இளநரையும் ஏற்படாது.

• மஞ்சள் துண்டை ஊசியில் குற்றி நெருப்பில் பிடித்து எரிந்த பின்புவரும் புகையை மூக்குத் துவாரத்தினருகில் பிடித்து உள்ளிழுத்துக்கொண்டால் தலைவலி, தடிமன், மூக்கடைப்பு என்பன குணமாகிவிடும். தொடர்ந்து மூன்று நாட்களுக்கு இவ்வாறு செய்தால் உடனடி நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

• மஞ்சள் பொடியை வேப்பிலையுடன் சேர்த்துத் தண்ணீர் விட்டு அரைத்து பூச்சிக்கடி, சருமக்கிரந்தி உள்ள இடங்களில் பூசி வரக் குணமடையும்.

• குழந்தைகளுக்கு இரவில் இரண்டு பேரீச்சம்பழங்களும், அரைத் தம்ளர் பாலும் குடிக்கத் தினமும் கொடுத்து வந்தால் மனோபலமும், மூளைப்பலமும் ஏற்படும்.

• சர்க்கரை நோய் உள்ளவர்கள் காலையில் வெறும் வயிற்றில் 1 தேக்கரண்டி வெந்தயத்தூள் சாப்பிட்டுவர குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு குறையும் அல்லது சோற்றுடன் வெந்தயப்பொடி சேர்த்து நெய்கலந்து சாப்பிட்டுவர குளுக்கோசின் அளவு குறையும்.

## பாதங்களை அழகுபடுத்த……

உங்கள் பாதங்களை அழகுபடுத்த சில டிப்ஸ். இவற்றில் ஏதாவதொன்றை தொடர்ந்து செய்யின் உடனடி மாற்றத்தை உணரலாம்.

• ஒரு பக்கெட்டில் மிதமான சுடுநீரை எடுத்து அதில் 10மி.லீ டெட்டாலும், 20 மி.லீ ஷாம்புவும் கலந்து நன்றாக கலக்குங்கள். பின்பு அதில் 10 நிமிடம் பாதங்களை அமுக்கி வையுங்கள். இவ்வாறு செய்வதால் கால் பாதங்களிலுள்ள அழுக்குகளும், கிருமிகளும் நீக்கப்படுவதோடு பாதங்களின் அழகும் கூடும்.

• நகப் பாலிஷ் போடுவதற்கு முன்னால் ஒவ்வொரு விரலுக்கும் இடையில் பஞ்சு வைத்துக் கொள்ளுங்கள். நகத்தில் கோட்டிங் அடித்து விட்டு தேவையான நிறத்தில் நகப்பாலிஷ் போடவும்.

• மசாஜ் 'கிரீம் அல்லது மாயிச்ரைசிங் லோஷன் கொண்டு பாதத்திலிருந்து கணுக்கால் வரை மசாஜ் செய்து வருவது பாதங்களுக்கு அழகு சேர்க்கும்.

• காலையில் சிறிது நேரம் வெறுங்காலுடன் புல்லின் மீது நடத்தல் நல்ல பயிற்சியாகும்.

• துத்தி இலையை சாம்பிராணியுடன் சேர்த்து அரைத்து பற்று போட்டு வந்தால், விரைவில் விரல் நகங்களில் சொத்தை நீங்கி பளபளப்பாகும்.

• ஆலிவ் எண்ணெய்யை லேசாக சூடாக்கி விரல்களின் மீது தேய்த்து ஊற வைத்தால் நகங்கள் உடையாமல் இருக்கும்.

• இளஞ்சூடான நீரில் துளசி மற்றும் புதினாவை போட்டு விரல்களை 10 நிமிடம் வைத்தால் கிருமிகள் இறந்து நகம் சுத்தமாகும்.

• 2 தே. கரண்டி கிளிசரின், 2 தே. கரண்டி பன்னீர், 1 தே.கரண்டி எலுமிச்சம் பழச்சாறு மூன்றையும் கலந்து கால் பாதத்தில் தேய்த்து விட்டு படுத்தால் குதிக்கால் வெடிப்பு ஏற்படாது.

## நெய்ச்சோறு

**தேவையான பொருட்கள்:**

சம்பா அரிசி - 500 கிராம், உருளைக்கிழங்கு - 500 கிராம், நெய் 1/4 போத்தல் / மாஜரின் 200 கிராம், கஜு - 50 கிராம், பிளம்ஸ் - 50 கிராம், கறுவாப்பொடி - 1 தே.கரண்டி (மட்டமாக), மஞ்சள்தூள் - 1 தே.கரண்டி (நிரப்பி), உப்பு - அளவிற்கு, சிறிதாக வெட்டிய கறிவேப்பிலை - 1 மே.கரண்டி, சிறிதாக வெட்டிய வெங்காயம் - 3/4 சுண்டு, றம்பை - 4 துண்டு, ஆட்டெலும்பு - 250 கிராம், இறைச்சி - 500 கிராம், கறிமிளகாய்த்தூள் - 1 தே.கரண்டி (நிரப்பி), ஏலம் - 15, தேங்காய்ப்பால் - 4 மே.கரண்டி, மிளகுத்தூள் - அளவிற்கு, வினாகிரி - 1 மே.கரண்டி, சோயா சோஸ் - 2 மே.கரண்டி, தக்காளி சோஸ் - 2 மே.கரண்டி

**செய்முறை :**

பாத்திரத்தில் எலும்பைச் சிறு துண்டுகளாக வெட்டிப்போட்டு 4 - 5 சுண்டு தண்ணீர் விட்டு, மஞ்சள்த்தூள், உப்புத் தூள் என்பவற்றைப் போட்டு மூடி அவிய விடவும். அரிசியின் அளவைப் பொறுத்து தண்ணீரின் அளவை தேவையான அளவிற்கு மாற்றிக் கொள்ளவும். பின்பு எலும்பு அவித்த நீரை வடித்துப் பானையில் விட்டு அடுப்பில் வைத்து அரிசியைக் கழுவிப்போட்டு ஏலமும் சேர்த்து அவியவிட்டு, நன்கு அவிந்து தண்ணீர் நன்கு வற்றியதும் இறக்கி ஒரு பெரிய பாத்திரத்தில் கொட்டி ஆறவிடவும். பின்னர் இறைச்சியை நன்றாகக் கழுவிச் சிறிய துண்டுகளாக வெட்டி அளவிற்கு உப்பு, மிளகாய்த்தூள், வினாகிரி என்பன சேர்த்து நன்கு பிசைந்து ஒரு மணி நேரம் ஊற வைக்குக. பின் உருளைக்கிழங்கைத் தோல் சீவிச் சிறு துண்டுகளாக வெட்டி அளவாக உப்புத்தூள் போட்டு புரட்டி வைத்துக்கொள்க. அத்துடன் கஜுவைவைத் துப்பரவாக்கிச் சிறு துண்டுகளாக வெட்டி வைத்துக்கொள்க. பின்பு தாச்சியில் அரைவாசி நெய்யைக் காயவிட்டு கஜு, பிளம்ஸ் என்பவற்றைத் தனித்தனியாகப் போட்டு பொரித்தெடுத்துக் கொள்க. தாச்சியில் மிகுதியாக உள்ள நெய்யினில் வெட்டிய உருளைக்கிழங்கைப் போட்டுப் பொரித்தெடுத்துக் கொள்க. இப்போது நெய்யினில் வெட்டிய வெங்காயத்தில் அரைவாசியைப் போட்டு வதங்க விட்டு அதனுள் கறிவேப்பிலை, றம்பை என்பனவும் போட்டு வதக்கி, அதனுள் இறைச்சியைக் கொட்டி நன்கு புரட்டி வதங்கவிட்டபின் கறுவாத்தூள், மிளகுத் தூள், தேங்காய்ப் பால், சோயா சோஸ், தக்காளி சோஸ் முதலியவற்றை இட்டு மூடி அவியவிட்டு நீர் வற்றியதும் இறக்கிக் கொள்ளவும்.

பின்பு பெரிய தாச்சியில் நெய்யைக் காயவிட்டு மிகுதி வெங்காயத்தைப் போட்டு வாசம் வரும் வரை வதங்கவிட்டு, அதனுள் ஆறவைத்துள்ள சோறு, இறைச்சி, பொரித்து வைத்துள்ள கஜு, பிளம்ஸ், உருளைக்கிழங்கு என்பவற்றைக் கொட்டி நன்கு கிளறி இறக்கிக் கொள்ளவும். இதனை கோழிக் குருமா அல்லது இறைச்சிக் கறி என்பவற்றுடன் பரிமாறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### 19 வது திருத்தச்சட்டம் வருகின்றது

நிறைவேற்றப்படவுள்ள அரசியல் அமைப்பின் 19வது திருத்தச்சட்டத்தில் பிரதம நீதியமைச்சரின் பதவிக்காலம் 3வருடங்களுக்குள் மட்டுப்படுத்தப் படுவதுடன் பாராளுமன்ற நிலையக்கட்டளைகள் நாட்டின் சட்டங்களாக உருவாக்கப்படாமல் உள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் சிறானி பண்டாரநாயக்காவின் குற்றப்பிரேரனையின் தொடர்ச்சியாக இவை நிகழ்கிறது.

இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 107(5) இன் படி மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் இளைப்பாறும் வயதெல்லை 65 ஆண்டுகளாகவும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் இளைப்பாறும் வயதெல்லை 63 ஆண்டுகளாகவும் உள்ளது. இதன்படி 2011 மேமாதம் நியமிக்கப்பட்ட சிறானி பண்டாரநாயக்கா 2023 வரை பிரதம நீதியரசராக பதவிவகிக்கும் வாய்ப்பிருந்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனியின் தலைவர்கள் இவ்வாறான நீண்ட ஆயுளை பிரதம நீதியரசர் கொண்டிருப்பது தமது அரசியல் நடவடிக்கைகளுக்கு ஆபத்தானது என்ற கருத்துடையவர்களாக இருப்பதால் 3 வருடங்களாக உதயமாகிறது.

அவ்வாறே பாராளுமன்ற நிலையியற் கட்டளையினை தவறானது என சிறானியின் விடயத்தில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினால் ஏற்பட்ட முரண்பாடுகளைக் களையும் முகமாக பாராளுமன்ற நிலையியற் கட்டளைத் தீர்மானங்கள் சட்டமாக்கும் முடிவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது ஏனெனில் தற்போது வரை பாராளுமன்ற நிலையியற் கட்டளை சட்டமாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை இதன் ஊடாக பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொடர்பாக அனைத்து நெகிழ்வுகளும் இல்லாமல் போய்விடுவதாக பெயர்குறிப்பிட விரும்பாத அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

அடுத்து வரவுள்ள 20வது அரசியலமைப்புச் சட்டத்திலேயே 13வது திருத்தச்சட்டத்தினை புத்தாக்கம் செய்வதற்கு ஆராயப்படுவதாகவும் தெரியப்படுத்தப் பட்டுள்ளது.

### கறுப்புப்பட்டியலிட்ட ஈரானிய கம்பனிக் கப்பல் தப்பியோடியது.

ஈரானின் தற்காப்பு தாக்குதல் ஏவுகனைத்திட்டத்திற்கு உதவுகின்றது என்ற சந்தேகத்தின் பேரில் அமெரிக்காவினால் கறுப்புப்பட்டியலிட்ட ஈரானிய கம்பனிக்குச் சொந்தமான கப்பல் இலங்கையில் இருந்து தப்பிச் சென்றுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் இலங்கையில் வைத்து பிடிபட்ட M.Vஅமினா என்ற இக்கப்பல் ஜேர்மனிய வங்கியின் வேண்டுகோளின் பேரில் காலித்துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தது.

சர்வதேச கடற்பரப்பின் 12 கடல் மைல்களுக்கப்பால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இக்கப்பல் மீது இலங்கையில் சட்டத்துறை நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ள முடியாதிருந்ததாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. எனினும் கப்பலிடு அதிகார நிறுவனங்களின் கூற்றுப்படி இலங்கையின் கடலெல்லைக்குள்ளேயே இக்கப்பல் நங்கூரமிடப் பட்டிருந்ததாக தெரியவருகிறது.

இக்கப்பல் கம்பனி ஐரோப்பிய ஒன்றியத்தினாலும் கறுப்புப்புள்ளி இடப்பட்டுள்ளது.

வர்த்தகக் கப்பலிடு பணிப்பாளர் நாயகம் A.Wசெனரத்தினவின் கருத்துப்படி இக்கப்பலை தடுத்து நிறுத்தும் உத்தரவு டிசெம்பர் 12ம் திகதி கிடைத்ததாகவும் இதனடிப்படையில் இக் கப்பல் 14ம் திகதி இலங்கைக் கடற்பரப்பில் இக்கப்பல் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## The Sunday Observer:

### சட்டவாளர் சங்கத்தின் முடிவில் மாற்றமில்லை

புதிய பிரதம நீதியரசரை வரவேற்பதில்லை என்ற தமது முடிவில் மாற்றமில்லை என சட்டவாளர் சங்கத்தலைவர் விஜயராஜ ராஜபக்ஷ தெரிவிக்கின்றார்.

புதிய பிரதிநீதியரசராக மொகான் பீரிஸ் அவர்களை வரவேற்கும் அரச வரவேற்பு நிகழ்சிக்காக ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இக் கருத்து வெளியாகியுள்ளது.

புதிய பிரதிநீதியரசரை சட்டபூர்வமாக வரவேற்கும் விழா தொடர்பான இயங்கு விதிகளின் படி புதிய பிரதம நீதியரசரை முதலில் வரவேற்கும் பொறுப்பு சட்டவாளர் சங்கத்தலைவருக்கே உள்ளது எனத் தெரியவருகிறது.

### 14 வங்கி அலுவலர்கள் கைது

சுமார் 263 மில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்திய இலங்கையின் பிரபல்யம் வாய்ந்ததொரு தனியார் வங்கி ஊழியர்கள் 14 பேர் குற்றப்புலனாய்வினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வங்கியால் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட முறையீட்டை அடுத்தே இக்கைது நிகழ்ந்துள்ளது.

வலைப்பின்னல் பணப்பரிமாற்ற வழியினூடாக 2 அரசசார்பற்ற நிறுவனங்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களுக்கூடாக இக்களவு நிகழ்ந்துள்ளது.

### இன்னும் 10 வருடங்களில் தலாவருமானம் 10000 டொலர்கள்

இன்னும் 10 வருடங்களுக்கு மகிந்த ராஜபக்ஷ அரசால்வாராயின் தலைக்குரிய வருமானம் 10000 டொலர்களை தாண்டிவிடும் என உயர்கல்வி அமைச்சர் S.Pதிஸ்ஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

மகிந்த சிந்தனையின் தொலை நோக்கின் படி நாடு முன்னேறி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார் அதனடிப்படையிலே 2015 தலைக்குரிய வருமானம் 4000 டொலர்களைத் தாண்டிவிடும் என அவர் தெரிவித்தார். இந்நோக்கை அடைவதற்காக அரசு பணவீக்கத்தை இரு இலக்கங்களிலிருந்து ஒரு இலக்கத்திற்கு குறைத்துள்ளதாகவும் வெளிநாட்டு ஒதுக்கத்தை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### வேலை தேடிச் செல்பவர்கள் தொடர்பாக புதிய சட்டங்கள் அறிமுகம்

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைதேடிச் செல்பவர்கள் தொடர்பாக புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்த அதற்குரிய அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார். அமைச்சரின் தலைமையில் கடந்தவாரம் நடைபெற்ற கூட்டத்தில் மாற்றங்கள் தொடர்பாக பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

### உணவைக் கையாளுபவர்கள் மீது கடும் கட்டுப்பாடுகள் – கொழும்பு மாநகரசபை

உணவகங்கள், சாப்பாட்டுச் சாலைகள், சிற்றுண்டிச் சாலைகள் போன்றவற்றில் உணவினைக் கையாளுபவர்கள் கட்டாயம் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற கடும் கட்டுப்பாட்டை கொழும்பு மாநகரசபை எடுக்கவுள்ளது. உல்லாச பயணப் போக்குவரத்துத்துறை விருத்திக்காகவும் நகரப் பிரதேசத்தில் கடைகளில் உண்பவர்களின் நலன் கருதியும் இத்தீர்மானத்தை கொழும்பு மாநகரசபை எடுத்துள்ளது அத்துடன் உணவைக் கையாள்பவர்கள் யாவரும் பதிவைப் பெற்றிருக்க வேண்டும் என்பதுடன் பதிவைப் பெற அவர்கள் மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதனையினை மேற்கொள்ள வேண்டும் எனவும் கொழும்பு மாநகரசபை தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Leader

### சிறாணியின் பாதுகாப்பு நீக்கப்பட்டது.

சிறாணியின் உயிருக்குப் பாதுகாப்பில்லையென்ற நிலையுள்ள போதிலும் அவருக்கு வழங்கப்பட்டிருந்த காவல்துறைப் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது.

காவல்த்துறைப் பேச்சாளர் பிரியந்த ஜெயக்கொடி அவர்களின் கருத்துப்படி " சிறாணி தற்போது ஒரு சாதாரண குடிமகள். எனவே அவருக்கு காவல்த்துறைப் பாதுகாப்பினை வழங்கவேண்டிய தேவை எதுவும் இல்லை. அதனால்தான் அவருக்கு வழங்கப்பட்டிருந்த காவல்த்துறைப் பாதுகாப்பும் அவரது பிரத்தியேக வீட்டிற்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த காவல்த்துறை கண்காணிப்பிடமும் அகற்றப் பட்டுவிட்டன" எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவர் மேலும் தெரிவித்த போது முன்னால் பிரதம நீதியரசர்கள் எவருக்கும் காவல்த்துறைப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் ஏ.எவ்.பி செய்தி நிறுவனத்திற்கு அளித்த செவ்வியொன்றில் சிறானி " எனது உயிர் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. அத்துடன் எனது கணவனினதும் மகனினதும் உயிர்களும் கூட" எனத் தெரிவித்துள்ளார். "என்னுடன் கடந்த 16 வருடங்களாகப் பணியாற்றியவர்களுக்கு எனது பிரியாவிடைய அளிக்கக் கூட அனுமதிக்கப் படவில்லை. சட்டப்படி இப்போதும் நான்தான் பிரதம நீதியரசர்" என அவர் மேலும் தெரிவத்தார்.

### பங்களாதேசை நோக்கிச் செல்லும் தொழிற்சாலைகள்

ஐரோப்பிய ஒன்றியத்தால் தற்போதுவரை வழங்கப்பட்டிருந்த ஜி.எஸ்.பி பிளஸ் கொடை நீக்கப்பட்டதால் ஆடைத் தொழிற்சாலைகள் இலங்கையிலிருந்து வெளியேறத் தொடங்கியுள்ளன.

ஆயிரக்கணக்கான இலங்கையர்களின் வருமான மூலங்களாக இருந்த இவ்வாடைத் தொழிற்சாலைகளின் இடப்பெயர்வால் அவர்கள் தொழில் இழந்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

இவ்வருடம் ஜனவரி மாதம் 2ம் திகதி இரண்டு ஆடைத் தொழிற்சாலைகள் இலங்கையிலிருந்து பங்களாதேஸ் நோக்கி நகர்ந்துள்ளன. இதனால் இத் தொழிற்சாலைகளுடன் தொடர்பினைப் பேணிவந்த ஏனைய சில தொழில்களும் முடங்கியுள்ளன.

### என்னை வலைக்குள் வீழ்த்தவே அரசு முயற்சி

தன்னைக் கைது செய்யும் முன்முயற்சியாகவே தனது அலுவலகத்தை இராணுவம் சோதனை செய்து வெடிப்பொருட்களை கைப்பற்றியதாகச் செய்தி வெளியிட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

ஐம்பதிற்கும் மேற்பட்ட காவல்துறையினரும் இராணுவமும் நீதிமன்ற முன்னனுமதியின்றி தனது கிளிநாச்சி அலுவலகத்தைச் சோதனை இட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். அத்தருணத்தில் சுதந்திர ஊடக அமைப்பைச் சேர்ந்த எவரும் அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

### மகாவம்சத்தில் பொன்சேகா

முன்னாள் இராணுவ தளபதி மகாவம்சத்தில் சேர்க்கப் படவுள்ளார். கடந்த முறை உருவாக்கப்பட்ட ஆறாவது மகாவம்ச பதிப்பில் சேர்க்கப்படாமல் இருந்த 1978-2010 வரையிலான இராணுவத் தளபதியின் பங்கே இப் பதிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக மேலும் தெரிவித்த மகாவம்ச சபை இணைப்பாளர் இவை ஏற்கனவே எழுதப்பட்டு விட்டதாக தெரிவித்தார். இந்த பதிப்பு அரசியல் ,பொருளாதாரம் ,கல்வி, சமூக கலாசார சுகாதாரம் ,சூழல் , விஞ்ஞானமும் தொழில்நுட்ப விடையங்களை உள்ளடக்கி உள்ளது.125 எழுத்தாளர்களால் எழுதப்பட்டு இருக்கும் மகாவம்சத்தின் ஆறாவது பதிப்பின் செவ்வை பார்க்கும் பணிகள் நடை பெற்று வருவதாகவும் அதன் பிறகு பாளிமொழியில் மொழிபெயர்க்கப்படவுள்ளது.

# முரசின் விளையாட்டு செய்திகள்

## ஆஸ்திரேலிய திறந்த டென்னிஸ்

### காலிறுதியில் செரீனா வில்லியம்ஸ் அதிர்ச்சித் தோல்வி

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டிகள் மெல்போர்ன் நகரில் நடந்து வருகின்றன. பெண்கள் ஒற்றையர் பிரிவிற்கான கால் இறுதிப்போட்டி கடந்த புதன்கிழமை நடைப்பெற்றது. இதில் உலகின் முன்னணி வீராங்கனைகளில் ஒருவரான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், சக நாட்டு வீரங்கனையான சுலோன் ஸ்டீபனுடன் மோதினார்.

இதில் செரினா வில்லியம்ஸ் 6-3, 5-7, 4-6 என்ற செட்கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். 15 முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியனான செரீனா வில்லியம்ஸின் இந்த அதிர்ச்சி தோல்வியானது, டென்னிஸ் வரலாற்றின் மிகப் பெரிய தோல்வியாக கருதப்படுகிறது.

செரினா வில்லியம்சை வீழ்த்தியதன் மூலம், 19 வயதான அமெரிக்காவின் சுலோன் ஸ்டீபன் உலக டென்னிஸ் ரசிகர்களின் கவனத்தை தன்பக்கம் ஈர்த்து இருக்கிறார்.

### இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார் சீன வீராங்கனை

ஆஸ்திரேலிய டென்னிசின் இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார் சீனாவின் வீராங்கனை லீ-லா.

ஒன்ரரை மணித்தியாலங்கள் நீடித்த உலகின் இரண்டாம் நிலையிலுள்ள இரஸ்ய வீராங்கனை மரியா சரபோவாவுடனான மென்பந்துச் சமரில் லீ-லா இரண்டு நேர் செட்டுக்களில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

கிராண்ட சிலாம் பட்டத்தை வென்ற ஒரே ஆசிய வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றுள்ள லீ-லா ஆஸ்திரேலிய பட்டத்தை வெல்லும் இறுதிப் போட்டியில் விக்டோரியா அசரன்காவைச் சந்திக்கவுள்ளார்.

7முறை கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்ற ஜஸ்ட்டின் ஹெனின்னின் பயிற்சியாளர் கார்லோஸ் ரொட்ரிக்ஸ் தான் தற்போது லீ-லாவின் பயிற்சியாளராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





## இந்தியா ஹாட்ரிக் வெற்றி

## மூன்றாவது ஒரு நாள் போட்டியிலும் இங்கிலாந்து அணியை வென்றது

### தொடரைக் கைப்பற்றியது இந்திய அணி

இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 4-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி பஞ்சாப் மாநிலம் மொகாலியில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் டோனி, இங்கிலாந்தை முதலில் ஆட அழைத்தார். இங்கிலாந்து 50 பந்து பரிமாற்ற முடிவில் 7 விக்கெட்டை இழந்து 257 ஓட்டங்கள் சேர்த்தது. 'ரூட் 57 ஓட்டங்களுடனும், டிரெட் வெல் 6 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இந்தியா தரப்பில் ஜடேஜா 3 விக்கெட்டுகளும், அஸ்வின், இஷாந்த் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளும் கைப்பற்றினர். அதன்பின்னர் 258 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியின் துவக்க வீரர் காம்பிர் (10 ஓட்டங்கள்) விரைவில் விக்கெட்டை பறிகொடுத்தார். கோலி 26 ஓட்டங்களிலும், யுவராஜ்சிங் 3 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அதன்பின்னர் ரோகித் சர்மா-ரெய்னா ஜோடி சிறப்பாக ஆடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது. பந்துகளை நான்கு ஓட்டங்களாக பறக்க விட்ட ரெய்னா விரைவில் அரை சதம் கடந்தார். நீண்ட நேரம் களத்தில் நின்ற ரோகித் சர்மா 83 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். டோனி 19 ஓட்டங்களில் ஆட்டமிழக்க அதன்பின்னர் ரெய்னாவுடன், ஜடேஜா இணைய, இந்திய அணி 15 பந்துகள் மீதமிருந்த நிலையில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது. 89 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்த ரெய்னா ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார். இதுவரை நடைபெற்ற 4 போட்டிகளில் இந்தியா 3 போட்டிகளிலும், இங்கிலாந்து ஒரு போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளன. எனவே தொடரை இந்தியா கைப்பற்றியுள்ளது. கடைசி போட்டி தர்மசாலாவில் நாளை நடக்கிறது.

(சுதன்)



## திருக்கோணமலை கொமர்ஸல் வங்கி பொது வைத்தியசாலைக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

திருக்கோணமலை கொமர்ஸல் வங்கியால் இருதய ரேகை மானி (ஈ.சி.ஜி) இயந்திரமொன்றும், இரத்த அழுத்தத்தை மதிப்பீடு செய்யும் பத்துச் சாதனங்களும் திருமலைப் பொதுவைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.



## இலங்கைக்கு எதிரான கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி தொடர் சமநிலையில் முடிந்தது

இலங்கை கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இவ்விரு அணிகளுக்கிடையிலான 4 ஒருநாள் போட்டிகள் முடிவடைந்த நிலையில் இலங்கை அணி 2-1 என முன்னிலையில் இருந்தது.

5-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி கடந்த புதன்கிழமை ஹோபார்ட்டில் நடந்தது. நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி, ஆஸ்திரேலியாவை துடுப்பாட அழைத்தது. அதன்படி முதலில் களமிறங்கிய ஆஸ்திரேலியா 50 பந்து பரிமாற்ற முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 247 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அபாரமாக ஆடிய பிலிப் ஹக்ஸ் 138 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இதையடுத்து 248 ஓட்டங்கள் என்ற இலக்கைத் துரத்திய இலங்கை அணிக்கு, தொடக்க ஆட்டக்காரர் ஜெயவர்தனே 38 ஓட்டங்கள் அடித்து தனது பங்கை நிறைவு செய்தார். ஆனால், அதன்பின்னர் சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் சரிந்தன. இடைநிலை துடுப்பாட்ட வீரர் மேத்யூஸ் பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். அவருடன் இணைந்து நிதானமாக ஓட்டங்கள் சேர்த்த மென்டிஸ் 26 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அரை சதம் கடந்த மேத்யூஸ் 67 ஓட்டங்களில் ஆட்டமிழக்க மற்ற வீரர்களும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இதனால் இலங்கை அணி 48.3 பந்து பரிமாற்றங்களில் 215 ஓட்டங்களுக்குள் சுருண்டது. ஆஸ்திரேலியா 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆஸ்திரேலியா தரப்பில் டோஹர்த்தி, ஹென்ரிக்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகள் கைப்பற்றினர். ஜான்சன், மெக்கே இருவரும் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக ஹக்ஸ் தேர்வு செய்யப்பட்டார். 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 2-2 என சமநிலையில் முடிந்தது.

இலங்கையின் குலசேகராவுக்கு தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டது. இதையடுத்து இரு அணிகளும் 2 இருபது ஓவர் 20-20 போட்டிகளில் விளையாட உள்ளது. முதல் போட்டி சிட்னியில் இன்றும், 2-வது போட்டி மெல்போர்னில் 28-ம் திகதியும் நடைபெற உள்ளது.

இலங்கை அணித்தலைவர் மஹெல ஜெயவர்த்தன இப்போட்டித் தொடர் தொடர்பாக தனது கருத்துக்களை ஐசிசிக்கு அறிவிக்கவுள்ளார்.



#58, Vidyalayam Road, Trincomalee.
Off: 026 2224933 Mob: 0715415854, 0773663103 & ssdigitals.shan@gmail.com

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 12. 01 2013ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.